விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 20 வெள்ளிக்கிழமை (04.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 016

# பிரதம நீதியரசரை விசாரிக்க

# தெரிவுக்குழுவுக்கு அதிகாரமில்லை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அதிகாரம் இல்லையென மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் காவலரண் விரைவில் அகற்றப்படும்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் சூழலில் உள்ள இராணுவக் காவலரண் உடனடியாக அகற்றப்படும். அதற்கான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டு வருவதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

யாழ் மாநகர சபையில் நேற்று மாலை இடம்பெற்ற (19ஆம் பக்கம் பார்க்க)

## மினிபஸ் விபத்தில் ஒருவர் பலி

(கொடிகாமம்)

கொடிகாமம், புத்தூர்ச் சந்தியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற மினி பஸ் விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

மாத்தளை மாவட்டத்தின் பரஹவத்த அக்குரஸ்ஸ எனும் பகுதியைச் சேர்ந்த வீவத்தாஹே நிஹால் (19ஆம் பக்கம் பார்க்க)

## 'பாலியல் வன்கொடுமையிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்!'

### மண்டைதீவில் நேற்று மௌனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

பாலியல் வன்கொடுமையிலிருந்து எங்களைக்காப்பாற்றுங்கள் என வேண்டுகோளை விடுத்து மண்டைதீவில் முன்பள்ளிச்சிறார்கள் மௌனப்பேரணியில் பங்கு கொண்ட னர்.

நான்கு வயது சிறுமி ஒருவர் கடந்த 28 ஆம் திகதி மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தில் உள்ள தோட்டக்கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

மீட்கப்பட்ட சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது வன்புணர்வில் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

சிறுமி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் குற்றவாளியைக் கண்டறிந்து கைது செய்வதை வலியுறுத்தியும் மண்டைதீவு பொது அமைப்புகள் இணைந்து நேற்று முற் (19ஆம் பக்கம் பார்க்க)



## தோட்டக் கிணற்றில் வயோதிபரின் சடலம்

(கரவெட்டி)

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் தோட்டக்கிணற்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் பருத்தித்துறை பொலிஸாரினால் நேற்று மதியம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் துன்னாலை வடக்கு போதனைப் பகுதியைச் சேர்ந்த கணபதி கிருஸ்ணன் (வயது-73) என்ற வயோதிபருடையது என உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு உணவு அருந்திவிட்டு வெளியே சென்ற இவர் பின்னர் சடலமாக நேற்று (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிக்க உயர்கல்வி அமைச்சருடனான சந்திப்பில் முடிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளினை எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் மீள ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சின் அலுவலகத்தில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுடன் பல்கலைக் கழக நிர்வாகத்துடனான சந்திப்பொன்று நேற்றுபிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

இச் சந்திப்பின் போதே மேற்படித் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது. கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்று யாழ்.பல்கலையில் ஏற்பட்ட குழப்ப நிலையினை யடுத்து அதன் பின் வந்த நாட்களில் நடைபெற்ற சம்பவங்களினையடுத்தும் 10 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் நான்கு மாணவர்களான யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.டவானந்தன், அதன்செயலாளர் பி.தர்சானந்த், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கே.ஜெனமேனன், விஞ்ஞானபீட மாணவ ஒன்றிய உறுப்பினர் எஸ்.சொலமன் ஆகியோர் பயங்கரவாதத்திற்கு துணை போகின்றதாக இராணுவத்தினரால் கூறப்பட்டு வெலிகந்த முகாமிற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## ரி.ஐ.டியினரின் விசாரணையில் மருத்துவர் சிவசங்கர்

### அடுத்தது என்ன புனர்வாழ்வா?

(யாழ்ப்பாணம்)

மருத்துவர் இ.சிவசங்கர்மேலதிக விசாரணைகளுக்காக பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் வவுனியா அலுவலகத்திற்கு நேற்று மாற்றப்பட்டுள்ளார்.

இவர் கொக்காவில் இராணுவ முகாமிற்கு கொண்டு சென்ற ஐபாட், ஒலிப்பதிவு கருவி, தொலைபேசிகள் என்பனவும் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் தொழில்நுட்ப பரிசோதனைகளுக்காக கையளிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார் என மாங்குளம் பொலிஸாரினால் மருத்துவரின் உறவினர்களுக்கு கூறப்பட்டது. உறவினர்களும் நீதிமன்ற வழக்கினை எதிர் கொள்வதற்கான (19ஆம் பக்கம் பார்க்க)

## சீருடை தரித்த இராணுவத்தினர் சிங்கள மொழியினை போதிப்பதா?

### நீதிமன்றில் முறையிட கூட்டமைப்பு முடிவு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் இராணுவத்தினர் சிங்களமொழியினை மாணவர்களிற்கு கற்பிக்க மேற் கொண்டுவரும் முயற்சிக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில், பாடசாலைகளில் கற்பித்தல் செய்பவர்களுக்கு சில விதிகள் உண்டு.

எல்லோரினையும் மாணவர்களுக்கு கற்பித்து விடுங்கள் என கூறி அவர்களினை ஆசிரியர்களாக்கிவிட முடியாது.

எமது தமிழ் மாணவர்களிற்கு இராணுவம் சிங்கள மொழியினை கற்பிக்கப்போவதாகக் கூறியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுமியைக் கொன்ற பாதகனுக்கு மரணதண்டனையை வழங்குங்கள்!

## வேலணை பிரதேச சபைத் தலைவர் சீற்றம்

(யாழ்பாணம்)

நான்கு வயதுச் சிறுமியை வன்புணர்விற்கு உட்படுத்தி கொலை செய்த குற்றவாளி கண்டறியப்பட்டு தூக்குத்தண்டனையை வழங்கினாலும் பரவாயில்லை என வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராஜா தெரிவித்தார்.

மண்டைதீவில் 4 வயதுச் சிறுமி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் குற்றவாளியை கண்டறிந்து கைது செய்வதை வலியுறுத்தியும் பொது அமைப்புக்கள் இணைந்து நேற்று மண்டைதீவு புனித பேதுருவானவர் தேவாலயம் முன்பாக மௌனப் பேரணி ஒன்றினை நடத்தியிருந்தனர்.

இதில் கலந்து கொண்டு தமது கண்டனத்தைத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது, சிறுமியின் படுகொலையை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சம்பவம்கள் இடம் பெறாதவகையில் பொலிஸார் நடவடி க்கை எடுக்கவேண்டும்

சிறுமியின் மரணம் எப்படி நடந்திருந்தாலும் யாரலும் நடத்தப்பட்டிருந்தாலும் குற்றவாளிக்கு தண்டனை வழங்க வேண்டும்.

தூக்குத்தண்டனை வழங்கினாலும் பரவாயில்லை. ஆனால் குற்றவாளி தப்பிக்க கூடாது.கடுமையாகத் தண்டிக்க வேண்டும். சிறுவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ரோஜாவனம் சிறுவர் கழகத் தலைவர் அ. தனுஷனால் வேலணைப் பிரதேச சபைத் தலைவரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

(செ-6)





பிள்ளையார் இன்

40% கழிவு

இன்றுமுதல் அதி விசேட40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

தொடர்புகளுக்கு: இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-1976)

மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

05.01.2013 முதல் 10.01.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற் கொள் ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

*தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத் துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுக மாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.*

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறு கள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

(சி-2029)

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

Children's World

Pre School

ஆங்கில மொழி பாலர் பாடசாலை

Open The Door To Your Child's Future

சிறுவர் அபிவிருத்தி மகளீர் விவகார அமைச்சின் தேசிய கொள்கைக்கு அமைவானது

- Language Development
- Knowledge Development
- Skill Development
- Values Development
- Speach & Drama Class.



ஆரம்பம் 09.01.2013

அநுமதிகள் 2 1/2 வயது முதல்



Play-based "Learning Through Play" British Curriculum

K.K.S, வீதி கோண்டாவில் மேற்கு

0777729525


# தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு மீளவும் நீதிமன்று அழைப்பாணை

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுகுழு உறுப்பினர்களுக்கு மீளவும் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்கள் நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிவான்கள் உத்தரவிட்டுள்ளனர்.

எதிர்வரும் 15-ம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகுமாறு இவ் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிவான்களான காமினிஅமரதுங்க,கே.ஸ்ரீ பவன் மற்றும் பிரியசாத்டெப் ஆகிய நீதிவான்கள் மேன்முறையீட்டு நீதிமன்றின் சட்டவரை விலக்கணத்தை நேற்று அறிவித்தனர்.(செ-11)

# 2014இல் ஐ.தே.க ஆட்சியமைக்கும்!

## ரோமில் ரணில் பேச்சு



எதிர்வரும் 2014-ம் ஆண்டில் தேர்தலொன்றை நடத்துவதற்கான சூழல் நிலவுகின்றது.அந்த தேர்தலின்போது நாட்டில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமொன்று உருவாகும் என்று அக்கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தாலிக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ரணில் நேற்று ரோம் நகருக்குச் சென்றிருந்தார். அங்கு ஐ.தே.க ஆதரவாளர்களைச் சந்தித்து உரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க இந்த ஆண்டில் பல்வேறு முன்னேற்ற வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.அத்துடன் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, நீதிமன்றத்தின் சுயாதீனம் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாத்தல் தொடர்பில் ஆர்ப்பாட்டங்களை ஐ.தே.க நடத்தும் என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (செ-11)

# சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் அழைப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுத்தொடர்பில் நடைபெறவிருக்கின்ற வாதப்பிரதிவாதங்களுக்கு உதவி புரிவதற்காக எதிர்வரும் 7ஆம் திகதி நீதிமன்றத்திற்கு வருமாறு சட்டமா அதிபருக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

ஒரு நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேணையின் செயன்முறை தொடர்பாக உயர் நீதிமன்றம் அளித்துள்ள வியாக்கியானத்தை தொடர்ந்து இந்த விடயத்தின் அவசரதன்மை பற்றி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வாவினால் முன்வைக்கப்பட்ட கருத்தினை தொடர்ந்தே மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் குழுமம் வாதப்பிரதிவாதங்களை எதிர்வரும் 7ம் திகதி வரையிலும் ஒத்திவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

# மரண அறிவித்தல்

## பண்டாரி வேலாயுதம்

சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரி வேலாயுதம் 03.01.2013 வியாழக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான பண்டாரி பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், அற்புததேவியின் பாசமிகு கணவரும், காலம்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மருமகனும், அமரர் வள்ளியம்மை, அமரர் அப்பாச்சி, அமரர் லட்சுமியார், அமரர் கிருஸ்ணபிள்ளை மற்றும் அருணாசலம், அமரர் தெய்வானை, அமரர் உமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீரஞ்சன், அமரர் ஸ்ரீதரன், அமரர் ஸ்ரீகுமார் மற்றும் ஸ்ரீகாந்தன், ஸ்ரீமோகனதாஸ், மகாலட்சுமி, அன்னலட்சுமி, ஸ்ரீமுரளீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்களேஸ்வரி, ஜெயசுதா, ஸ்ரீராம், விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஐங்கரன், கோபிகை, திவ்யா, வேலவன், வசிகன், வார்ஜினி, மகிழினி, லக்சாயினி, மோகனராம், ஜெயராம், நாராஜினி ஆகியோரின் பாசமிகு பேரனும்,

அமரர் மனோன்மணி, அமரர் தங்கரத்தினம் மற்றும் குணராசா அமரர் இராஜராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். ஈமக்கிரிகை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்

தகவல்: குடும்பத்தினர்

0771015349,0213735324

(1398)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## குணமும் கோபுரமும்

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவர் ஒரு பெரிய கோயில் கட்டினார்.

அயல் ஊர்களில் உள்ள சிற்பிகளை வரவழைத்து அழகான சிற்பங்களைச் செய்யச் சொன்னார்.

ஊரிலே இருந்த மக்களும் அக்கோயிலைக் கட்டுவதற்கு தங்களால் முடிந்த உதவிகளைச் செய்தார்கள்.

இரவு பகலாக வேலை நடைபெற்றது. கோயில் சிறிது சிறிதாக உயர ஆரம்பித்தது.

அவ்வூரிலே ஒரு வயதான அம்மா இருந்தார். மிகவும் வறுமையானவர். அவருக்கு மனதினுள் ஒரு உறுத்தல். ஊரிலே உள்ள அனைவரும் கோயில் கட்டுவதற்கு உதவுகிறார்கள். என்னால் எதுவுமே முடியவில்லையே... என்று நினைத்துக் கவலைப்பட்டார்.

நல்ல வெயில் நேரத்திலே சிற்பிகள் சிரமப்பட்டு சிலை வடித்துக் கொண்டிருந்தார்கள். அந்நேரத்தில் அவர்களுக்கு தாகம் எடுக்குமல்லவா...

அதனாலே சிரமப்பட்டு ஒரு குடத்திலே தண்ணீர் எடுத்து இடுப்பிலே வைத்து மெதுவாக கொண்டு வந்து, அங்கே வேலை செய்பவர்களுக்கு தாகம் எடுக்கும் போதெல்லாம் ஒரு குவளையிலே தண்ணீர் கொடுத்தார். ஏதோ அந்த அம்மாவினால் முடிந்த சிறிய உதவி அது.

இப்படி சிறிய சிறிய வேலைகள் நடைபெற்று கடைசியாக கர்ப்பக்கிரகத்தின் மேலே விமானம் அமைக்க வேண்டியது தான் மிகுதி வேலையாக இருந்தது.

அந்தச் சிற்பிகளிலே அனுபசாலியான ஒருவர் இந்த அம்மாவைத் தேடி வந்தார்.

"பாட்டி! உங்களிடம் உள்ள ஏதாவது ஒரு பொருளை கொடுங்கள். அதை விமானத்திலே வைத்துக் கட்டினால் உங்கள் நினைவாக அமையும்" என்றார்.

இந்த அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதாவது இருந்தால் கொடுக்கலாம்... அதுவும் இல்லையே... என்று நினைத்து கவலைப்பட்டார். சிறிது நேரம் யோசித்தார். அதன் பின் சொன்னார்...

"இதோ பார்... என்னிடமோ ஒன்றுமில்லை. இதோ வாசல் படியில் கிடக்கும் இந்தக் கல்லை வேண்டுமென்றால் எடுத்துக் கொண்டு போங்கள்" என்றார்.

உடனே அந்தக் கல்லை பெயர்த்து எடுத்துக் கொண்டு போனார்கள்.

என்ன ஆச்சரியம்... இவர்கள் எடுத்துச் சென்ற கல் மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது. ஏதோ அளவெடுத்து செய்தது மாதிரி அமைந்து விட்டது. அந்தக் கல்லையே அங்கே பதித்தார்கள். ஒரு வழியாக கோயிலைக் கட்டி முடித்தார்கள். அதனையடுத்து கும்பாபிஷேகமும் சிறப்பாக நடந்து முடிந்தது.

இவற்றினைப் பார்த்த ராஜாவுக்கு மனதினுள் மிகவும் பெருமையாக இருந்தது.

இவ்வளவு பெரிதாக இந்தக் கோயில் உருவாவதற்கும் சிறப்பாக விழா நடந்தேறுவதற்கும் நாம்தானே காரணம் என்று மனதினுள் நினைத்துக் கொண்டார்.

இவ்வாறு "நான்" என்ற பெருமையோடு அன்றிரவு ராஜா அரண்மனையிலே படுத்துறங்கினார்.

உடனே ஒரு கனவு... ஆண்டவனே அந்த ராஜாவிடம் கனவிலே வந்தார். ராஜா ஆண்டவனை வணங்கினார்.

"இறைவா... உங்களுக்காக நான் கட்டியிருக்கிற கோயில் எப்படி இருக்கிறது? நன்றாக இருக்கிறதா?" என்று ராஜா கேட்டார்.

அதற்கு இறைவன் கூறிய பதில்... என்ன தெரியுமா?

"நீ கட்டிய கோயிலில் அந்தக் கிழவியின் நிழலிலே நான் சுகமாக இருக்கிறேன்" இவ்வாறு கூறிவிட்டு இறைவன் மறைந்து கொண்டார்.

கனவு கலைந்தது. ராஜா விசாரணையை ஆரம்பித்தார்.

"யார் அந்தக் கிழவி?" என்று கேட்டார். அமைச்சர்கள் நடந்தவற்றை விபரமாகக் கூறினார்கள்.

அப்போதுதான் ராஜாவுக்கு ஞானம் பிறந்தது. "நான்" – என்ற எண்ணம் நழுவிப் போனது. கோபுரம் எவ்வளவு பெரியது என்பது முக்கியமல்ல. குணம்தான் முக்கியமாகும்.

"அந்த வயதான அம்மா நமது நாட்டிலே வாழ்வதுதான் நமக்கு உண்மையான பெருமை" என்று ராஜா நினைத்தார்.

*தென்கச்சி கோ-சுவாமிநாதன்*

# கொழும்பு கம்பன் கழகத்தின் போட்டிகள் 12 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக வட மாகாணத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான போட்டிகளில் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் கோவில் வீதியில் (நல்லூர் கந்தசுவாமி கோவில் பின் வீதி வடக்குப் புறம் அருகில்) அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில் இடம்பெறவுள்ளன.

போட்டிகள் 3 பிரிவுகளாக நடைபெறவுள்ளன. கீழ்ப்பிரிவுப் போட்டிகளில் 14 வயதுக்குட்பட்டோரும் மத்திய பிரிவுப் போட்டிகளில் 15-19 வயதுக்குட்பட்டோரும் மேற்பிரிவுப் போட்டிகளில் 20-35 வயதுக்குட்பட்டோரும் கலந்து கொள்ளலாம்.

மேலும் சென்ற விழாக்களில் தங்கப் பதக்கப் பரிசில்களைப் பெற்றோர் தவிர்ந்த பேசும், கவிதை இயற்றும் திறமையுள்ளோர் மேற்படிபோட்டிகளில்கலந்துகொள்ளலாம்.

பேச்சு மற்றும் கவிதை போட்டிக்கான தலைப்புகள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் 'எனவும் மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் உடன் 'வழங்கப் படும் தலைப்புக்களில் கவிதை இயற்றவும் பேச வும் தகுதி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் எனவும் கொழும்பு கம்பன்கழக்ம் அறிவித்துள்ளது.

வடமாகாணப் போட்டியாளர் சிலர் விடுத்த வேண்டுகோளை ஏற்று போட்டிக்கான விண்ணப்பத் திகதி எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் இப்போட்டிகளில் இயல்பு ஆளுமையை வெளிப்படுத்துபவர்கள் கம்பன்கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுவர் எனவும் அறிவித்துள்ளது. மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 011 2360525, 077 3053241, 077 3787358 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# ஒருவருட நிறைவில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பயிலுநர் பட்டதாரிகள் ஒரு வருட பயிற்சிக்காலம் நிறைவடைந்துள்ளது. அடுத்த மாதத்தில் இருந்து அவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்பிரகாரம் பயிலுநர் பட்டதாரிகள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஒரு வருடம் பூர்த்தியடைகின்ற நிலையில் சேவையில் நிரந்தரமாக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.பி.அபேகோன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பயிலுநர் பட்டதாரிகள் தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உள்ளிட்ட பல அமைச்சுகளில் சேவையாற்றுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பயிலுநர் பட்டதாரிகள் இதுவரை 51 ஆயிரத்து 500 பேர் சேவையில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 | 120 |
| உருளைக்கிழங்கு | 75-80 | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 300 | 150 |
| தக்காளி | 60 | 60 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 70 | 70 |
| கரட் | 100-110 | 80 | 140 | 140 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 40-50 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 170 | 160 |
| பெரிய வெங்காயம் | 95 | 90 | 120 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 100-120 | 120 | 130 | 120 |
| லீக்ஸ் | 130 | 110 | 140 | 130 |
| பீற்றூட் | -- | 80 | 160 | 110 |
| கறிமிளகாய் | 200 | 200 | 180 | 200 |
| இராசவள்ளி | -- | 600 | -- | -- |
| போஞ்சி | 90 | 90 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | -- | 150 | 130 | -- |
| கீரை - 1 பிடி | 5-6 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 50-60 | 90 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 40 | 35-40 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 170 | 160 |
| வெங்காயப்பூ | -- | 250 | 80 | 70 |

# இராசி பலன்

**04.01.2013**
**(மார்கழி 20, வெள்ளிக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு**
**சப்தமி மாலை 6.32 மணிவரை**
**அட்டமி மாலை 6.33 தொடக்கம்**
**உத்தரம் முற்பகல் 11.14 மணிவரை**
**இராகுகாலம் 11.01-12.31 மணிவரை**
**சுபநேரம் 6.31-8.01 மணிவரை**

**மேடம்** கலகலப்பான செய்திகள் காலை நேரத்திலேயே வந்து சேரும் நாள், தேக நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்** மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்** விருந்தினர்களை வரவேற்று வியப்படையும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களில் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு.

**கடகம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**சிங்கம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கன்னி** அமைதி வந்து சேர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், விரும்பிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்க வேண்டிய நாள், வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், அமைதி வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், புதிய பொருள் வரவு ஏற்படும், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** உற்றார், உறவினர் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரும், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**மகரம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புகள் கூடும், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், இனசன வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், நட்பு வட்டம் விரிவடையும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வருடத்தில் மட்டும் 352 நிறுவனங்கள் இணைவு

## யாழ்.பிராந்திய தொழிற் திணைக்களம் தகவல்

(யாழ்ப்பாணம்)


ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவராக இருந்து இறந்துபோனவரின் ஊழியர் சேமலாப நிதியை அவரினால் பதிவு செய்யப்பட்ட பின்னுரித்தாளர் பெறமுடியும். அவ்வாறில்லாது அவரின் உறவினர் பெறுவதாயின் கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணத்துடன் பிராந்திய தொழிற் திணைக்கள ஆணையாளர் யாழ்ப்பாண காரியாலயத்தில் பதிவு செய்து பெற்றுக் கொள்ள முடியும் என பிராந்திய தொழிற்திணைக்கள பிரதி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் தொழிற் திணைக்கள கொழும்பு தலைமைக் காரியாலயத்திலேயே வழங்கப்பட்டு வந்த குறித்த சேமலாப நிதி கடந்த வருடம் டிசெம்பர் முதலாம் திகதியிலிருந்து யாழ்ப்பாணம் பிராந்திய காரியாலத்திலும் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வருடத்தில் மட்டும் ஊழியர் சேமலாப நிதியத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள 267 நிறுவனங்கள் இணைந்துள்ளன. இதில் 422 ஆண்களும் 222 பெண்களுமாக மொத்தம் 644 ஊழியர்கள் இணைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 85 நிறுவனங்கள் இணைந்துள்ளன. இதில் 75 ஆண்களும் 75 பெண்களுமாக மொத்தம் 150 ஊழியர்கள் அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர்.

கட்ந்த வருடம் 982 ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் மீளளிப்புப்பணம் பெற்றுள்ளனர் எனவும் பிராந்திய பிரதி தொழில் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ)




# ஊரதீவு- இறுப்பிட்டி பிரதான வீதியை புனரமைக்க கோரிக்கை

## பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஊரதீவு- இறுப்பிட்டி பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசனிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர். ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் வேலணை பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவி க்கப்பட்டுள்ளதாவது,

புங்குடுதீவு ஊரதீவு- இறுப்பிட்டி (ஆவரங்கால்- சங்குமாலடி வீதி வரையான பிரதான வீதியின் ஒரு பகுதி மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. சுமார் 5 கிலோ மீற்றர் அளவான இவ்வீதியில் 2 கிலோ மீற்றர் வரையான பகுதி கடந்த 2010 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. ஏனைய பகுதி எந்தவித புனரமைப்பும் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதால் கேரதீவு மற்றும் ஊரதீவு மக்கள் அன்றாட பணிகளை செய்ய முடியாமல் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

குறிப்பாக ஊரதீவு மற்றும் கேரதீவு பகுதிகளிலுள்ள மாணவர்கள் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்திலேயே தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இம் மாணவர்கள் நடந்தே தமது பாடசாலைக்குச் சென்று வருகின்றனர். இவர்களுக்கான போக்குவரத்து சேவையை மேற்கொள்ளுமாறு புங்குடுதீவு தனியார் சிற்றூர்தி சங்கத்தினரிடம் முறையிட்ட போதும் அவர்கள் வீதி சேதமடைந்திருப்பதைக் காரணம் காட்டி அதனூடாக தமது சேவையை மேற்கொள்ள மறுத்து வருகின்றனர்.

இதனால் சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து மாணவர்கள் நடந்தே பாடசாலைக்குச் செல்லும் துர்ப்பாக்கிய நிலை உள்ளது. அத்துடன் வீட்டில் ஆண்கள் இல்லாத, போக்குவரத்து வசதியில்லாத பெண்கள், சிறுவர்கள் வேறு இடங்களுக்கு செல்ல வேண்டுமாயின் 2 கிலோமீற்றர் தூரம் சன நடமாட்டம் அற்ற பகுதியூடாக நடந்து புங்குடுதீவு பிரதான வீதியை அடைந்தே தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் பிரதான கோவில்கள், இந்து மயானம் போன்றவையும் இவ் வீதியில் காணப்படுகின்றன. அவற்றுக்கும் கஷ்டப்பட்டே மக்கள் பயணிக்க வேண்டியுள்ளது.

கேரதீவு- ஊரதீவு கடற்றொழிலாளர்கள் மீன்களை விற்பதற்கு புங்குடுதீவு நுழைவாயில் பகுதிக்கே வர வேண்டும். இந்த நிலையில் வீதி சேதமடைந்து காணப்படுவதால் அவர்களின் வாகனங்கள் காற்றுப் போவதும் சேதமடைவதும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறன.

மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படும் ஊரதீவு- இறுப்பிட்டி வீதியை துரித கதியில் புனரமைத்து ஊரதீவு- கேரதீவு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத் தருமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)

## விவசாய, கால்நடை உற்பத்தி

# திணைக்களத்திற்கு 33 வாகனங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களங்களுக்கு முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கடந்த முதலாம் திகதி வழங்கி வைத்தார்.

ஏ-9 வீதியிலமைந்துள்ள வடமாகாண விவசாய அமைச்சுப் பணிமனையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், விதை உற்பத்தி பண்ணை என்பவற்றுக்கு 7 முச்சக்கர வண்டிகளையும் விவசாய திணைக்களத்தினைச் சேர்ந்த விவசாய போதனாசிரியர்களுக்கு 17 மோட்டார் சைக்கிள்களையும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினைச் சேர்ந்த கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 9 மோட்டார் சைக்கிள் களையும் வழங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், உத்தியோகத்தர்களுக்கு புத்தாண்டு வாழ்த்து தெரிவித்ததுடன் இவ் ஆண்டு சிறப்பாகவும் வினைத்திறனுடனும் செயலாற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

விவசாய மற்றும் கால்நடை உற்பத்தித் துறை அதிகாரிகளினது ஆற்றல்கள் பல்வேறு பயிற்சி நெறிகளின் மூலமாகவும் எவ்வாறு அதிகரித்தது என்றும் மேலும் ஒரு சேவை வழங்குநராக விவசாய சமுதாயத்திற்கு நாம் எமது சேவைகளில் உள்ள சில இடைவெளிகளை இன்னும் நிரப்ப வேண்டிய தேவை உள்ளது எனவும் தெரிவித்தார். எஃப்.ஏ.ஓ. என அழைக்கப்படுகின்ற உணவு விவசாய நிறுவனமானது விவசாய, கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன மற்றும் மீன்பிடித் துறைகளினூடாக மக்களுக்கு பல உதவிகளைப் புரிந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் சமுகமளித்திருந்தார்கள். (அ-9)

# இலவச கலை வகுப்புகளுக்கு நேர்முகத் தேர்வு நாளை

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற நிர்வகிப்பில் நடத்தப்படும் இலவச கலை வகுப்புகளின் 2013, 2014 ஆம் ஆண்டுகளுக்கான அனுமதி நேர்முகத்தேர்வு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நேர்முகத்தேர்வுக்கு கலந்துகொள்ள வரும் பழைய, புதிய மாணவர்கள் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் வருகை தரவேண்டும்.

மேலும் கலாமன்றத்தினூடாக நடத்தப்பட்ட போட்டிகள், பரீட்சைகளில் பங்குபற்றி பெற்றுக் கொண்ட சான்றிதழ்களையும் அதன் போட்டோ பிரதிகளையும் தம்முடன் எடுத்து வருதல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எக்காரணம் கொண்டும் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளாமல் மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, இப் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கு சீருடை, பரிசில்கள், சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன. (அ)

# சமூக அபி. அலுவலர் நியமனம்

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் கடமையாற்றிய த.கிருபாகரன் சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு சன சமூக அபிவிருத்தி அலுவலராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய திருமதி.செல்வராணி ஜெகதீசன் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச சபையில் வாரத்தில் ஒருநாள் கடமையாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# கலந்துரையாடல் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் நடைமுறைமையினையும் செயற்பாட்டினையும் முன்னேற்றி செல்வதற்காக கொழும்பு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்தினரால் முகாமையாளர்கள் யாழ்.கிளையில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என பிரிவுத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோருக்கு அதன் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

# புதிய பாடநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

E-CITY ஆங்கிலக் கல்லூரியின் சர்வதேச தரம் வாய்ந்த புதிய பாடநெறிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரியின் நிறைவேற்றுப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி பாடநெறிகள் யாழ்ப்பாணம், சங்கானை, வேலணை ஆகிய பிரதேசங்களிலேயே நடைபெறவுள்ளன. (அ-9)




# முன்னெச்சரிக்கை கோபுரம் தொடர்பான விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஜே/ 401 பருத்துத்துறை (சுப்பர் மடம்) கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பின் பேரில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகானது முன்னெச்சரிக்கை கோபுரம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இவ்விழிப்புணர்வு சம்பந்தமாக பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும், இது ஒரு விழிப்புணர்வினை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமையினால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 வீதமான பிரஜைகள் மருந்து உள்ளெடுக்கின்றனர்

(கொழும்பு)

இலங்கை பிரஜைகளில் 90 சதவீதமானோர் ஏதாவது ஒரு காரணத்திற்காக மருந்துகளை உட்கொள்வதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச வைத்தியசாலைகளுக்கு மாத்திரம் மாதமொன்றுக்கு 45 தொடக்கம் 50மில்லியன் பரசிடமோல் தேவைப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

அத்துடன், அரச வைத்தியசாலைகளுக்கு வருடமொன்றில் 570 மில்லியன் பெரசிடமோல் தேவைப்படுகிறது. மேலும் அநேகமானோர் தனியார் வைத்திய நிலையங்களில் மருந்துகளை கொள்வனவு செய்கின்றனர். இதன்படி நாளாந்தம் 90 சதவீதமான மக்கள் மருந்துகளை உட்கொள்கின்றனர்.

பலர் வைத்திய ஆலோசனை இன்றி மருந்துகளை உட்கொள்வதால் புதுப் புது நோய்களுக்கு ஆளாவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)


## காணி, வீடு விற்பனைக்கு

**காணி** — யாழ்ப்பாணம் அப்பலோ வைத்தியசாலைக்கும் ஆனைப் பந்திச் சந்திக்கும் இடையில் 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**வீடு** — பருத்தித்துறை பஸ் டிப்போவிற்கும் வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கும் இடையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**காணி** — பருத்தித்துறை முதலாம் கட்டைக்கும் பருத்தித்துறை பஸ்டிப்போவிற்கும் இடையில் காணி விற்பனைக்குண்டு.

**காணி** — வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

**ராஜலக்ஷ்மி என்ரப்பிறைஸ்**
Rajaluxmy Enterprise

காணி, வீடு வாங்கித் தருவதற்கும்
விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்

26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810



FIDE ET LABORE

## PATRICIAN INSTITUTE

### பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம்: 07.01.2013**

I.COMPUTER COURSES (கணனிப் பயிற்சி நெறி)

| Course | Duration |
|---|---|
| A.Advanced in Computer Programming | Duration 8 Months |
| B.Diploma in Microsoft Office | Duration 4 Months |
| C.Diploma in Desk Top publishing | Duration 4 Months |
| D.Diploma in Video Editing | Duration 4 Months |
| E.Diploma in Type setting | Duration 3 Months |
| F.Diploma in Computerized Accounting | Duration 4 Months |
| G.Diploma in Software Engineering | Duration 6 Months |
| H.Diploma in Micro media | Duration 4 Months |
| I.Diploma in Web Multimedia | Duration 4 Months |
| J.Professional Diploma in Graphic Design | Duration 6 Months |
| K.Computer Hardware Technology | Duration 4 Months |
| L.Internet & E-mail | Duration 1 Month |
| M.General Information Technology (GIT) | Duration 4 Months |
| N.Information & Communication Technology (ICT) | Duration 4 Months |

**II.Certificate Courses**

I. MS Word
II. MS Excel
III. MS Access
IV. MS Powerpoint
V. Visual Basic
VI. Java Script
VII. MYOB
VIII. Adobe photo shop
IX. Page Maker
X. Flash
XI. Quick Book
XII. Tally
XIII. Corel Draw
XIV. Peestree

2.Short Hand Typing (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
3.Short Hand Typing (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
4. General Moto Mechanism (மோட்டார் வாகனம் திருத்துதல்)
5.General Electrician (ஜெனரல் எலெக்ரீசியன்)
6.Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப்பயிற்சி)
7.Arc Welding (மின் ஒட்டுநர் பயிற்சி)
8.Carpentry (மரவேலை)
9.Refrigeration Air Conditioning (குளிர்சாதனப்பெட்டி திருத்துதல்)
10.CCTV& PABX Systems Contiguration & Maintenance பாதுகாப்பு ஒளிப்படக்கருவி பழுதுபார்த்தலும் கண்காணித்தலும், தொலைபேசி முறையை அமைத்தலும் கண்காணித்தலும் Duration 5 Months

குறிப்பு:
1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்
2.பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
3.வாகனங்களுக்குரிய தகுதிச்சான்றிதழ் 2013 ஆம் ஆண்டுக்குரியது. தற்போது வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை அனைத்து வாகன உரிமையாளருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Registrar,
Patrician institute,
61(59),St. patrick's Road,
Jaffna.

T.P: 021 2226148
Fax: 021 2226148
E-mail: spitee@sltnet.lk

(சி/2032)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
# பொது அறிவித்தல் - 2013

## 1. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2013

2013 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

## 2. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2013

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் 2013ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தினை 2013ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2013ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2013ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 3.வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு-268 பிரகாரமான அறிவித்தல்

3.1 வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல்/திருத்த வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை அறியத்தருகின்றேன்.
எனவே வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் கட்டட விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்ட ஈடும் வழங்கப்படாமலும் முன்னறிவித்தல் வழங்கப்படாமலும் சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்தில் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.3 அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

## 4. துவிச்சக்கரவண்டி மிருகங்களின் உரிமம் பெறல்

2013 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி மிருகங்களின் உரிமத்தை பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## 5.சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலக ஆதன வரி அறிவித்தல்

1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி வீதத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2013 ஆம் திததிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தந்த கந்தாயத்தின் முதல்மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2013ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## 6.சூழல் பாதுகாப்பு உரிமம்

மத்திய சுற்றாடல் அதிகார சபைத்தலைவரின் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் எனக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை/தொழிலை நடாத்துகின்ற உரிமையாளர்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2013ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்களை சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலகங்களில் பார்வையிட முடியும்.

## 7.வீதி ஒழுங்கைப் பேணுதல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் நகர மையப்பகுதியில் அதிகரித்த வாகன போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப் பேணும் சைகை குறியீட்டுப் பலகைகள் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனர். மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

## 8. விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்

இப்பிரதேச சபையின் நிர்வாகப்பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2013 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/நிறுவனங்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2013 ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

## 9. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தி.பிரகாஷ் - தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**உடுவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் இடைவிலகலுக்கு ஆசிரியர்களின் தவறுகளும் காரணம்

## யாழ்.வணிக சங்கத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவதற்கு வறுமை மட்டும் காரண மல்ல. ஆசிரியர்களின் தவறுகளும்தான் காரணம்தான் என யாழ்.வணிகக் கழகத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்தார்.

வணிகர் கழகத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கை யில்,

அண்மைக் காலங்களில் யாழில் 600 இற்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் கல்வியினை தொடர முடியாமல் இடை விலகி யுள்ளனர்.

இம்மாணவர்களில் பெரும்பான்மையா னவர்கள் குடும்ப சூழ்நிலை, வறுமை காரண மாக தமது கல்வியினை தொடர முடியாமல் இடை விலகி உள்ளனர்.

எனினும் குறைந்தளவிலான மாணவர் கள் பாடசாலை அதிபர்களினாலும் ஆசிரியர் களினாலும் இடைவிலக்கப்பட்டுள்ளனர்.

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாண வர்களுக்கு பண உதவி செய்து அவர்களின் கற்றலுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு விட முடியும்.

போட்டி நிறைந்த தற்போதைய சூழலில் கல்வியறிவு என்பது அவசியமானதொன்றா கும். சாதாரண தொழில் செய்வதற்கும் க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறு தற் போது அவசியமானதாக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளுக்கே வேலை இல்லாத நிலை காணப்படுவதனால் அவர்கள் சாதா ரண தொழில் செய்வதற்கும் முன்வருகின் றார்கள்.

இதனால் சாதாரணதரம் மட்டும் படித்தவர் கள் ஒரு தொழிலினை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

அதனைப் பெற்றுக் கொள்வதற்கு மாண வர்கள் தாமாக முன்வர வேண்டும். கல்விக்கு வறுமை என்பது தடையாக இருக்க முடி யாது.

உலகில் எத்தனையோ கல்விமான்கள், சாதனையாளர்கள் வறுமையின் மத்தியி லேயே கற்றுயர்ந்துள்ளனர்.

மாணவர்களை உயர்த்தி விடுவதில் அதி பர்களுக்கும் பெரும் பங்குண்டு. மாணவர் கள் இடைவிலகுவதற்கு பாடசாலைகளில் மாணவர்கள் வகுப்பேற்றப்படாமையும் ஒரு காரணமாகவுள்ளது.

இதில் ஆசிரியரின் தவறும் மாணவ்னின் தவறும் காரணியாகவே உள்ளது.

இவை களைந்தெரியப்பட்டு தமிழ் மாண வர்களின் கல்வி உயர்ச்சிக்கு அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும்.

கல்வி இல்லாத எதிர்காலம் இருண்ட காலம் என்பதனை மாணவர்களும் உண ர்ந்து கற்றலில் ஈடுபடல் வேண்டும்.

வறுமையினால் இடைவிலகிய மாணவர் களுக்கு தொடர்ந்தும் வணிகர் கழகம் உதவி புரியும். அவர்களை நீங்கள் எமக்கு இனங் காட்டுங்கள் என்றார்.

கல்வியில் மட்டுமல்லாது தனக்கு உள்ள திறனைக் கொண்டு ஒருவன் வாழ்க்கையில் முன்னேற முடியும் என ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்து கொண்ட வர்த்தகரும் கல்விக் காருண்யனுமான ஈ.எஸ்.பி.நாகரட்ணம் தெரிவித்தார். (அ-4)

## புதிய வாகன பதிவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

கடந்த 2012 ஆம் ஆண்டு புதிய வாகன பதிவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த ஆண்டில் சுமார் 4 இலட்சம் புதிய வாகனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதுவொரு பாரிய வீழ்ச்சி என திணைக் களம் சுட்டிக்காட்டியுள்ளது.

2011ஆம் ஆண்டில் ஐந்து இலட்சத்து 33 ஆயிரம் புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த வருடம் புதிய முச் சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் பதிவில் பாரிய வீழ்ச்சி காணப்படுவதாக மோட்டார் வாகன திணைக்களம் குறிப்பிட் டுள்ளது. (அ-2)

## கந்தளாய் குளத்தின் இரு வான்கதவுகள் திறப்பு

கந்தளாய் நீர்த்தேக்கத்தின் இரு வான் கதவுகள் நேற்று காலை முதல் திறந்து விடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக குசுமன்கட கால்வாயின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர்ப்பாசன பொறியியலாளர் டபிள்யூ.எல்.எம்.புத்திக தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தம்பலகாமம், மொல்லிய பதானை மற்றும் கிண்ணியா ஆகிய பகுதிக ளில் குசுமன்கட கால்வாயின் இருமருங்கி லும் உள்ள மக்கள் அவதானமாக இருக்கு மாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)


## பொருளியற்கல்லூரி | BARATHY

எமது மூன்று நிறுவனங்களிலும் **A/L 2015** கலை வர்த்தகப் பிரிவு

**ஆரம்பம்:- 06.01.2013 - ஞாயிறு**

நீங்கள் நன்கு அறிந்த யாழ்.மாவட்டத்தின் முன்னணி ஆசிரிய குழுவினால்

| பாடம் | பொருளியற் கல்லூரி நாவலர் றோட், யாழ்ப்பாணம் | பொருளியற் கல்லூரி கே.கே.எஸ்றோட், இணுவில் | BARATHY பிரதான வீதி, சித்தங்கேணி |
|---|---|---|---|
| ✷ பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் | மகேந்திரன் |
| ✷ கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | திருக்குமரன் |
| ✷ வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| ✷ தமிழ் | சத்தியவேந்தன் | சத்தியவேந்தன் | பாலா |
| ✷ இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | N.T.தரன் | N.T.தரன் |
| ✷ புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| ✷ நாடகமும் அரங்கியலும் | கணேஷ் | கணேஷ் | கணேஷ் |
| ✷ வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| ✷ அரசியல் | கோகுலன் | கோகுலன் | கோகுலன் |
| ✷ அளவையியல் | ஜெயசுரேஸ் | ஜெயசுரேஸ் | R.P.சர்மா |
| ✷ கிறிஸ்தவ நாகரிகம் கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| ✷ இந்து சமயம் | N.T.தரன் | N.T.தரன் | N.T.தரன் |
| ✷ ஊடகவியல் | ஆனந்தன் | ஆனந்தன் | ஆனந்தன் |
| ✷ இலகு கணிதம் | செந்தூரன் | செந்தூரன் | செந்தூரன் |
| ✷ சித்திரம் | சிறிஸ் | சிறிஸ் | சிறிஸ் |
| ✷ சங்கீதம் | குமுதினி | குமுதினி | குமுதினி |
| ✷ மனைப் பொருளியல் | றஜிதா | றஜிதா | றஜிதா |
| ✷ ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் | நிஷாந்தன் |
| ✷ I.C.T | அம்பி | அம்பி | அம்பி |
| ✷ விவசாயம் | விஷ்ணுதேவன் | விஷ்ணுதேவன் | விஷ்ணுதேவன் |

Note:-

**யாழ்.நகர் பொருளியற்கல்லூரிக்கு வரும் மாணவர்கள் கவனத்திற்கு;**

யாழ்.நகரில் எமது நிறுவனத்தை ஒத்த பெயரில் மாணவர்களை ஈர்க்கும் வகையில் எமக்கு தொடர்பில்லாத நிறுவனம் எங்கள் அருகில் இருக்கின்றது. இங்குள்ள பிரபல ஆசிரியர்கள் அங்கு எவரும் கற்பிப்ப தில்லை என்பதை அறியத் தருவதோடு நீங்கள் வரும்பொழுது நாவலர் றோட்டில் உள்ள பொருளியற்கல்லூரி எது என்பதை அவதானித்து வரவும்.

**உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்**

| | யாழ்.நகரில் | இணுவில் | BARATHY |
|---|---|---|---|
| கலைப்பிரிவு → | 8.00 A.M → | 9.00 A.M → | 12.00 P.M |
| வர்த்தகப் பிரிவு → | 8.00 A.M → | 2.00 P.M → | 8.00 A.M |

இயக்குநர் ஆசிரியர்கள்

(C-2025)


# கௌரவமாக பதவி விலகாவிட்டால் பலவந்தமாக விலக்கப்படுவீர்!

## ஷிராணிக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் எச்சரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணியின் பிரச்சி னையும் சர்ச்சைகளை ஏற்படுத்திய பிளாஸ் ரிக் கூடை பிரச்சினையும் ஒன்றுதான் என நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் பலே கில்லாடியாக நடித் துக் கொண்டிருப்பதாகவும் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்து அமைச்சர் கூறியிருந் தார்.

பிரதம நீதியரசர் பதவியில் இருந்து விலக ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கௌர வமான முறையில் பிரதம நீதியரசர் பதவி விலகாவிட்டால் அவரை பலவந்தமாக வீட் டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கான அதிகாரம் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு இருப்ப தாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிளாஸ்ரிக் கூடைச் சட்டம் தற்போது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதா கவும் அந்த சட்டத்தை மீறுவோர் தண் டிக்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# மில்லாவ பகுதியில் பதற்றமான நிலை

(கொழும்பு)

ஹொரண, மில்லாவ பகுதியிலுள்ள அழகுசாதனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றைச் சேர்ந்த ஊழியர் குழுவுக்கும் முகாமைத்துவத்துக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாக பதற்றமான நிலைமை உருவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தத்தி ன்போது நியமிக்கப்ப ட்ட வெளியாட்களை கம் பனியின் நிரந்தர ஊழி யர்கள் தாக்கினர்.

இதன் போது சம்பவ இடத்திற்கு வந்த பொலி ஸாரையும் வேலை நிறு த்தத்தில் ஈடுபட்ட ஊழி யர்கள் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில் இரு பொலிஸ் உத்தியோகத் தர்கள் ஹொரண வைத் தியசாலையிலும் 8 ஊழி யர்கள் பாதுக்கை மற் றும் ஹோமாகம வைத் தியசாலையிலும் அனு மதிக்கப்ப ட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)


## இயு லங்கா போரும் / இந்து, பௌத்த கலாசார பேரவை இணைந்து நடாத்தும் இலவச மொழியியல் வகுப்புகள்

2013 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்வது, மாணவர்கள் சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க லாம். விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் பெற் றுக் கொள்ளலாம். வகுப்புக்கள் ஜனவரி 15 ஆம் திகதி ஆரம்பிக்க இருப்பதாலும் மட்டுப்படுத்தப்பட்ட மாண வர் தொகை சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதால் தங்க ளுடைய விண்ணப்பத்தை விரைவுபடுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாணவர்கள் சாவகச்சேரி ஏ-9 வீதியில் அமைந்துள்ள கல்வி நிலையத்திலும் யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழம் வீதி, 29 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கல்வி நிலையத் திலும் வடமராட்சி மாணவர்களுக்கு நெல்லியடியில் ஆரம்பிக்க இருப்பதால் மாணவர்கள் இதற்கான விண்ணப் பங்களைத் தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி**

இல. 29, பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்
இயு லங்கா போரும் /
இந்து, பௌத்த கலாசார பேரவை
நிர்வாகம்

மேலதிக விபரங்களுக்கு:-
021 720 0157

(C-2030)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆண்டுகள் நிறைவில் Google



கூகுள் நிறுவனம் தொடங்கப்பட்டு பத்து ஆண்டுகள் முடிந்து விட்டன. இந்த பத்தாண்டு பாதையில் அதன் இமாலய வெற்றியைப் பார்க்கையில், அடுத்து வரும் ஆண்டுகளில் இந்நிறுவனம் என்ன செய்திடுமோ என்று வியக்க வேண்டியுள்ளது. அதன் சாதனைகளையும் அடுத்து என்ன செய்திடும் எனவும் இங்கு பார்க்கலாம்.

இணையத்தில் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில், கூகுள் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளது. அதே வேலைப் பண்பாட்டுடன் தொடர்ந்து வெற்றியைப் பெறும் என்பதிலும் சந்தேகமில்லை. இதன் திறனை அறிந்து கொள்ள, இதே வகையில் வெற்றி பெற்ற மைக்ரோ சொப்ட் நிறுவனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

பத்தாண்டு செயற்பட்ட பின்னர், கூகுள் ஆண்டு வருமானம் 2,000 கோடி டொலர். 33 ஆண்டுகளுக்குப் பின்னர், மைக்ரோசொப்ட் நிறுவனத் தின் வருமானம் 6,000 கோடி டொலர். தன் பத்தாவது ஆண்டில், மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் வருமானம் 14 கோடி டொலர் மட்டுமே. கூகுள் நிறுவனத்தின் இன்றைய சந்தை மதிப்பு 14,200 கோடி டொலர். மைக்ரோசொப்ட் நிறுவன மதிப்பு 24,100 கோடி டொலர். (ஆதாரம் www.nytimes.com).

கூகுள் நிறுவனத்தின் அலுவலர் எண்ணிக்கை ஏறத்தாழ 20,000. மைக்ரோசொப்ட் நிறுவனம் 90,000 அலுவலர்களைக் கொண்டுள்ளது. சராசரியாக, கூகுள் நிறுவன ஊழியர் ஒருவர் தன் நிறுவனத்திற்கு 10 லட்சம் டொலர் சம்பாதித்து கொடுக்கிறார். மைக்ரோசொப்ட் ஊழியர் 67,200 டொலர் ஈட்டித் தருகிறார்.

தேடல் சாதனத்தினைப் பொறுத்தவரை, கூகுள், சென்ற ஜூலை மாதத்தில் 4,800 கோடி தேடல்களைக் கொண்டிருந்தது. மைக்ரோசொப்ட் 230 கோடி தேடல்களைப் பெற்றது. ஒரு மணி நேரத்தில், கூகுள் கொண்டது 6 கோடியே 50 லட்சம் தேடல்கள். மைக்ரோசொப்ட் 31 லட்சம் தேடல்கள்.

அடுத்த ஆண்டு இதே நேரத்தில், கூகுள் நிறுவனத்தின் தேடல் சாதன வர்த்தகம், மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் வர்த்தகத்தினைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை மைக்ரோசொப்ட் விண்டோஸ் வர்த்தகம் தான், தொழில் நுட்ப உலகின் மிகப் பெரிய வர்த்தகப் பிரிவாகக் கருதப்பட்டு வருகிறது. கூகுள் இந்த பதிவினை முறியடிக்கும் காலம் விரைவில் வரும் எனலாம். விண்டோஸ் மற்றும் எம்.எஸ்.ஒபீஸ் வர்த்தகம் இரண்டைக் காட்டிலும் அதிகமான மதிப்பில், கூகுள் வர்த்தகம் உயரும். (ஆதாரம்: alleyinsider.com)

மென்பொருள் பிரிவைப் பொறுத்த வரை, கூகுள் யானைக்கு முன் உள்ள அணில் குஞ்சு தான். மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் ஒபீஸ் மென்பொருள் விற்பனை, சென்ற ஆண்டு 1,200 கோடி டொலர் மதிப்பில் இருந்தது. கூகுள் மென்பொருள் தொகுப்புகள் 40 லட்சம் டொலர் அளவிலேயே இருந்தது. ஆனால், கூகுள் அறிமுகப்படுத்திய மென்பொருள் தொகுப்புகளின் எண்ணிக்கை, மைக்ரோசொப்ட் நிறுவனத்துடன் ஒப்பிடுகையில் மிக மிக அதிகமாகும். தொடர்ந்து பல்வேறு மென்பொருள் தொகுப்புகளை, கூகுள் அளித்துக் கொண்டே இருந்தது, இருக்கின் றது.(cnn.com)

இருப்பினும், தன் 11 ஆவது வயதில், கூகுள் மிகப் பிரம்மாண்டமான ஒரு சக்தியாய், தகவல் தொழில்நுட்ப உலகிலும், வர்த்தகத்திலும் விசுவரூபம் எடுத்துள்ளது. ஆனால், வரும் பத்து ஆண்டுகள், இணையம் கூகுள் நிறுவனத்திற்கு ஒரு சவாலாய் இருக்கும்.' அமெரிக்க இணையப் பயனாளர்களைக் காட்டிலும், வளரும் நாடுகளின் பயனாளர் எண் ணிக்கை அதிகமாக இருக்கிறது. இதற்கேற்ப தன் செயற்பாடுகளை கூகுள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

தற்போதைக்கு சீனா தான், கூகுள் நிறுவனத்திற்கு பெரிய சவாலாய் உள்ளது. சீனாவின் இணைய தேடல் தளங்களான TenCent, Baidu, மற்றும் Sina ஆகியவையே சீன பயனாளர்கள் நாடும் தளங்களாக உள்ளன. கூகுள், மைக்ரோசொப்ட் மற்றும் Yahoo பயன்பாட்டின் மொத்த மும் இதற்கு இணையாகாது. அதே போல இந்த சீன தேடல் தளங்களும் பலருக்கு தெரியாமலேயே இருக்கின்றன.

இப்படி குறுகிய காலத்தில் அபரிமித வளர்ச்சியடைந்த கூகுள் தளத்தினை பத்து ஆண்டுகளுக்கு முன் யாருமே அறியாமல் தானே இருந்தார்கள். சீன தேடல் தளங்கள், பன்னாட்டளவில் பரவத் தொடங்கினால், கூகுள் சற்று சிரமப்பட வேண்டியதிருக்கும். ஆனால், கூகுள் தனக்குப் போட்டியாக வரும் எந்த பிரிவினையும் சமாளிக்கும் வகையிலேயே தன்னை வளர்த்து வருகிறது என்பதுதான் உண்மை.

# எரிபொருளுக்கு பதிலாக ஐஸ்கிறீம்...?

ஐஸ்கிறீமில் இருக்கும் ஹைட்ரோகார்பன்களை எரி பொருளாக பயன்படுத்தி கார்களை இயக்க முடியும் என இங்கிலாந்து ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். வாகனங் களில் பயன்படுத்தப்படும் பெற்றோல், டீசல் போன்ற மரபு எரிபொருட்களால் சுற்றுச் சூழலுக்கு தீங்கு ஏற்பட்டு வருகிறது. எனவே, மாற்று எரிபொருள் தொழில் நுட் பத்தை கண்டறிவதில் உலகின் பல்வேறு நாடுகளை சேர்ந்த விஞ்ஞானிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த நிலையில், இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்ட்டர் பல் கலைகழகத்தை சேர்ந்த நிக் டர்னர் தலைமையிலான ஆய் வாளர்கள் அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்களில் இருக்கும் ஹைட்ரோகார்பன்கள் மூலம் கார்களை இயக்க முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

ஐஸ்கிறீம், குளியல் சோப் மற்றும் சம்போ என அனைத் திலும் இருக்கும் ஹைட ரோகார்பன்களை கார்களுக்கான எரிபொருளாக பயன்படுத்தமுடியும் என அவர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும, இது குறித்த ஆராய்ச்சியை தீவிரப்படுத்தியிருக்குழ் இந்த ஆய்வுக் குழுவினர் விரை வில் முழுமையான ஆய்வ றிக்கையை வெளியிடவும் திட்டமிட்டுள்ளனர்.




டில்லி ஆட்டோ கண்காட்சியில் ஆர்இ-60 என்ற சிறிய ரக நான்கு சக்கர வாகனத்தை பஜாஜ் ஆட்டோ காட்சிக்கு வைத்திருந்தது. 4 பேர் செல்லும் வசதிகொண்ட இந்த புதிய வாகனம் விரைவில் அறிமுகப்படுத்த இருக்கிறது. தற்போது இந்த வாகனத்தை தீவிரமாக சோதனை நடத்தி வருகிறது பஜாஜ் ஆட்டோ.



# Gmail by Google

## Backup வசதி

ஜிமெயிலுக்கு Backup தேவையா? என ஆச்சரியத்துடன் நீங்கள் கேள்வி கேட்கலாம். ஜிமெயில் தரும் 10 ஜிபி அளவிற்கு மேலாகவும் நாம் மின்னஞ்சல்களை அடுக்கி வைக்கப் போகிறோமா? ஜிமெயில் தான், நம் மெயில்க ளைத் தேஜுவ இல்லாமல் நீக்கப்போவது இல்லையே! என்ற கருத்துக்கள் இருந்தாலும், அவ்வாறு ஆகிவிட்டால் என்ன செய்வது என்ற கவலையும் மனதில் தோன்றுகிறது.

நம் முக்கிய கோப்புக்கள் பலவற்றை, ஜிமெயில் மின்னஞ்சல்களில் சேமித்து வைத் திருக்கிறோம். குறிப்பாக, சிறிய அளவில் இயங் கும் நிறுவனங்கள் பல, தங்களின் ஆண்டு கணக்குகளை, கோப்புகளாக சேமித்து வைத் துள்ளன. எனவே, இலவசமாக இயங்கும் இந்த ஜிமெயில் சேவை என்றாவது மூடப்பட்டால், கோடிக்கணக்கான வாடிக்கையாளர்களின் நிலை திக்கற்றதாகிவிடும். எனவே தான் மற்ற மின்னஞ்சல் நிறுவனங்களின் அஞ்சல்களுக்கு Backup எடுப்பது போல, ஜிமெயில் தளத்தில் உள்ள அஞ்சல்களையும், அதன் கோப்புகளுடன் Backup எடுத்து வைப்பது நல்லது.

இதற்கான பயன்படும் புரோகிராம் ஒன்று இணையத்தில் கிடைக்கிறது. ஜிமெயில் Backup என்னும் இந்த gmail-backup-0.107.exe புரோகிராமினை http://www.gmail-backup. com/download என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து, இன்ஸ்ரோல் செய்திடலாம்.

இன்ஸ்ரோல் செய்தவுடன், Backup என் பதில் கிளிக் செய்தால், நாம் நம் கணனியில் எந்த Folder ஐ குறிப்பிட்டோமோ, அந்த Folder இல், மெயில்கள் மற்றும் கோப்புகள் அனைத் தும் Backup செய்யப்படும். அனைத்து மெயில் களும் தேவை இல்லை எனில், குறிப்பிட்ட நாட்களுக்கிடையே கையாளப்பட்ட மெயில் களை மட்டும் Backup செய்திடலாம்.

மேலும் இது குறித்து தகவல்கள் வேண் டும் எனில், http://www.gmail-backup.com என்ற முகவரியில் உள்ள தளத்தில் பெறலாம்.

# facebook நிறுவனத்தின் ஆண்டு வருமானம் 500 கோடி டொலர்

'புயல் வேகத்தில் சென்று இருப்பவற்றை உடைத்தெறி' என்ற வாசகம் பேஸ்புக் நிறுவன வளாகத்தில் பெரிய அளவில் ஒட்டப்பட்டு, அதன் செயல்வேகத்தினைக் காட்டுவதாய் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 500 கோடி டொலர் வருமானம், நிறுவனத்தின் இன்றைய சந்தை மதிப்பு 6,000 கோடி டொலர் என பேஸ்புக் அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது.

இதனுடைய பொறியியலாளர்கள், பல மாற்றங்களையும் வசதிகளையும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். வரும் ஆண்டில், ஒரு புதிய விளம்பர நெட்வேர்க்கினை அமைத்து, உங்கள் பொருட்களை விற்பனை செய்திட, தொலைபேசி மூலமாக வாடிக்கையாளர்களை அணுகும் அமைப்பை உருவாக்க இருக்கின்றனர்.

மொபைல் சாதனங்களில் பேஸ்புக் இயக்கத்தின் வழி, இனி விளம்பரங்கள் அதிக எண்ணிக்கையில் வரும். நீங்கள் இருக்கும் இடம் அறிந்து, உங்களுக்கு, அங்கே உள்ள விடுதிகள், திணைக்களங்கள், மருத்துவ மனைகள் மற்றும் நாம் செல்ல விரும்பும் இடங்கள் குறித்து, நாம் கேட்காமலேயே தகவல்கள் தரப்படும். "Nearby" என்ற இதன் தொழில் நுட்ப வசதி மூலம் இவை கிடைக்கும். இந்த வசதி, ஐ.ஓ.எஸ். இயங்கும் அப்பிள் மொபைல் மற்றும் அண்ட்ராய்ட் இயங்குதளம் கொண்ட சாதனங்களில் இயங்கும் வகையில் அண்மையில் பெரிய அளவில் மாற்றம் செய்யப்பட்டது.

வாடிக்கையாளர்கள், அவ்வப்போது அளிக்கும் தகவல்கள் அடிப்படையில், பேஸ்புக் அவர்களின் விருப்பங்களை அறிந்து கொள்கிறது. ஆனால், பெரிய அளவில் இயங்க அவை போதாது. எனவே, தரவரிசைத் தகவலைப் பெறும் Yelp போன்ற நிறுவனச் செயற்பாடுகளை பேஸ்புக் மேற்கொள்ளும். இந்த நிறுவனத்தையே பேஸ்புக் வாங்கி, தன்னுடன் இணைத்துக் கொள்ளலாம். மேலும் இந்த வகை தகவல்கள், பேஸ்புக் தற்போது தீவிரம் காட்டி வரும் தேடல் சாதனத்திற்கும் ஓர் அடிப்படையை அமைக்கும்.

கூகுள் நிறுவனத்தின் AdSense போல, ஒரு விளம்பர நெட்வேர்க்கினை பேஸ்புக் அமைக்க இருக்கிறது. இது பேஸ்புக் தரும்

தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கினாலும், தனித்தே விளம்பரங்களைக் கையாளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கென மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பிரிவினை வாங்குவதற்கான பேச்சு வார்த்தையில் பேஸ்புக் ஈடுபடும் எனத் தெரிகிறது. பேஸ்புக் நிறுவனத்தின் வளர்ச்சிப் பாதையில் இந்த விளம்பர நெட்வேர்க் பெரிய இடம் ஒன்றைப் பெறும் என எதிர்பார்க்கலாம்.

பேஸ்புக் நிறுவனத்தின் வர்த்தகப் பிரிவாக Facebook Gifts வளர இருக்கிறது. இது அமேஸான் டாட் காம் அல்லது வால்மார்ட் போன்ற நிறுவனங்களுக்கு இணையாக, தொடக்கத்தில் இருக்காது. ஆனாலும், இந்த வகையில் சிறிய அளவில் இயங்கும் நிறுவனங்களுக்குப் போட்டியாகவே இருக்கும். வருங்காலத்தில், பெரிய நிறுவனங்களையும் சவாலுக்கு அழைக்கலாம். 2013இல் நிச்சயம் இதில் பெரிய வளர்ச்சியை எதிர்பார்க்கலாம்.

# Windows 8

## இயங்குதளத்தின் வேகத்தினை அதிகரிக்க...

*கணனியின் நினைவகங்களில் தேங்கும் தற்காலிக கோப்புக்களை நீக்கி அதன் வேகத்தினை அதிகரிக்க செய்வதற்காக பல்வேறு மென்பொருட்கள் காணப்படுகின்றன.*

*இவற்றின் வரிசையில் விண்டோஸ் 8 இயங்குதளத்தினை கொண்டு இயங்கும் கணனிகளில் வேகத்தினை அதிகரிப்பதற்கென விசேடமாக தயாரிக்கப்பட்ட மென்பொருளே Windows Tuner ஆகும்.*

*முற்றிலும் இலவசமாக கிடைக்கும் இம்மென்பொருளின் உதவியுடன் RAM Memory, System Registry ஆகியவற்றிலுள்ள தற்காலிக கோப்புக்களை நீக்குவதுடன் இயங்குதளத்தின் Startup மற்றும் Booting வேகத்தினை அதிகரிக்க செய்கின்றது.*

*இவற்றுடன் கணனியில் காணப்படக்கூடிய தவறுகளை இனம்கண்டு அவற்றினை நீக்குதல், வன்றட்டினை மேம்படுத்தி விரைவான தரவு அணுகலை உருவாக்குதல் போன்றவற்றிற்கும் இம்மென்பொருள் பயன்படுகின்றது.*

*மேலும் Windows 8, தவிர்ந்த Windows 7, Vista போன்ற இயங்குதளங்களிலும் Windows Tuner செயற்படக்கூடியதாக காணப்படுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## தென்மராட்சியின் வயற்பரப்பில் கோலோச்சும் வெண் முதுகு தாவரத்தத்தி (White backed planthopper)- சோ(ப)கடெலா (க)பேர்சிபெரா (*Sogatella furcifera* (Horvath)- காரணம் எது? அல்லது யார்?

யாழ்.மாவட்டத்தின் பரந்த வயற்பரப்பு தென் மராட்சியின் கோவிலாக்கண்டியில் தொடங்கி மறவன்புலோ, தனங்கிளப்பு வழியே சாவகச்சேரி வரை பச்சைப்பசேல் என்றிருக்க வேண்டிய வெளி சோகை பிடித்தாற் போல் ஓர் இளமஞ்சள் நிறமோடிக் காணப்படுகின்றது. நெல் வயல்களில் தத்தி வகை பூச்சியின் தாக்கம் அதிகரித்திருப்பதாக வந்த பத்திரிகைச் செய்தியை தொடர்ந்து அப்பூச்சியை அறிய கடந்த வாரம் அந்தப்பக்கம் சென்றிருந்தேன்.

அநேகமாக எல்லா வயல்களிலும் (கறுப்பன் இன நெற்பயிரைத் தவிர) அப்பூச்சி காணப்படுகின்றது. பொதுவாக நெற்பயிரின் அடியில் நீர்மட்டத்துக்கு மேலே நிறையுடலி அணங்கு நிலைகள் என பயிரின் ஒவ்வொரு மட்டத்திற்கும் 4-50 உருப்படிகளைக் காணக்கூடியதாக இருந்தது. இந் நிலைமையை நான் அவதானித்தது இப்பீடையை அழிக்கவென பூச்சி நாசினியை விசிறி 10-12 நாட்களின் பின்னராகும்.


**பீடையை இனங்காணல்:-** பீடையைக் கட்டுப்படுத்துவதில் இதுவே முதலான படியாகும்.

தற்போது தாக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கு பூச்சி கெ(ர)மிப்ரெறா (hemiptera) வருணத்தில் டெல்பசிடே (Delphacidae) குடும்பத்தைச் சேர்ந்த சோ(ப)கடெலா (க)பேர்சிபெரா ***(Sogatella furcifera)***- எனும் தாவரத்தத்தியாகும்.

சிறிய 2-4 mm நீளமான, ஒடுங்கிய உடலின் தலை மற்றும் இடை, அனு மார்பு பகுதியின் நடுமுதுகுப்புறத்தில் வெண்ணிற கோடு போன்று காணப்பட அதன் இரு பக்கமும் கபில அல்லது கறுப்பு நிறமாக காணப்படுவதால் வெண் முதுகு தாரவத்தத்தி (White backed planthopper- WBPH) என அழைக்கப்படுகின்றது. இது ஆசிய பிராந்தியத்தில் அடிக்கடி பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு முக்கிய பீடையாகும். எமது நாட்டிலும் இதன் தாக்கம் ஏற்கனவே அறியப்பட்டுள்ளது.

எல்லோரும் நன்கறிந்த கபிலத்தாவரத்தத்தி (Brown Plant Hopper-BPH)- நிலபாவடா லியூஜென்ஸ் ***(Nilapavata lugens)*** இதே குடும்பத்தைச் சேர்ந்ததாகவும் ஒரே விதமான வாழிடத்தைக் கொண்டிருந்து ஏற்கனவே நெல்லில் பெரும் பீடையாகவும் அறியப்பட்டதால், தற்போதய பூச்சியை சரியாக இனங்காணுதல் மிக முக்கியமாகும்.

ஏனெனில் 1997-98 ஆம் ஆண்டு பெரும் போகத்தில் பொலநறுவை, அநுராதபுரம், குருநாகல் மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஏற்பட்ட கபிலத் தாவரத்தத்தியின் தாக்கத்தின் பின்னரான ஆய்வுகள் வெண் முதுகு தாவ ரத்தத்தி (WBPH) யின் பெருக்கத்தை எதிர்வுகூறியிருந்தன. கபிலத் தாவரத்தத்தியைக் (BPH) கட்டுப்படுத்தவென எதிர்ப்பின நெல்வர்க்கங்களை பயிரிடும் போது வெண் முதுகுதாரவத்தத்தி (WBPH)யின் குடித்தொகை அதிகரிக்க வாய்ப்புக்கள் இருப்பதால் தொடர்ச்சியான பீடை கண்காணிப்பும் விவ



*Sogatella furcifera (h;orvath)*
(வெண் முதுகு தாவரத்தத்தி நிறையுடலி

சாயிகளுக்கு தகுந்த அறிவூட்டலும் வழங்க வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டிருந்து (Nugaliyadde *et.al.* 1999)

இன்று அதற்கான நேரம் கடந்து போயிருப்பது கண்கூடாகத் தெரிகின்றது.

இவ்விரு தாவரத்தத்திகளும் உரியத்திலிருந்து உணவை உறிஞ்சுபவைகளாயிருந்தாலும் கூட வெண் முதுகு தாவரத்தத்தி (WBPH) வைரஸ்நோய்க் காவியாக தொழிற்படுவதில்லை. அதிகரித்த குடித்தொகையின் தொடர்ச்சியான உணவூட்டலே நெற்பயிரின் மஞ்சள் நிறத்திற்குக் காரணமாகி மேலும் தீவிரமடையும்போது பயிர் முற்றாக எரிந்து வைக்கோல் போலாகி விடுகின்றது. இதுவே தத்தி எரிவு (hopper burn) எனப்படுகின்றது.

### குடித்தொகை அதிகரிப்பிற்கு என்ன காரணம்?

இயற்கை சூழலில் இத் தாவரத்தத்திகள் புற்களின் குடும்பம் பொயேசியே (Poaceae) யைச் சேர்ந்த புல் வகைகளின் உரியத்தில் இருந்து சாற்றை உறிஞ்சி உணவாக்கி வாழும். ஆனால், இயற்கையின் நியதிப்படி எந்தவொரு குடித்தொகை அதிகரிப்பிற்கு சார்பாகவும் எதிராகவும் தொழிற்படும் காரணிகள் இச் சூழலிலும் தொழிற்படுவதால் சூழல் மாற்றங்களுக்கேற்ப

**சார்பான காரணிகளின் அதிகரிக்கும் உதாரணமாக:-**

1. இங்கே புல் வகையைச் சேர்ந்த நெற்பயிர் தனிப்பயிராக பெரும் பிரதேசத்தில் வளர்க்கப்படுகின்றதால் உணவுக்கு தமக்குள் போட்டியிடத் தேவையில்லை.

2. நைதரசன் பசளையிடப்பட பின்னர் தாவரம் சாற்றுத் தன்மை (Saculant) கூடியதாக மாறும் நிலை தத்திகள் சாற்றை குத்தி உறிஞ்சுவதை இலகுவாக்குகின்றது.

3. வெப்பமான ஈரச் சூழல்- பெருமழைக்குப் பின்னானவெயில்வெண் முதுகு தாவரத்தத்தி (WBPH)க்கு ஏற்றது.

4. கைவிடப்பட்ட அல்லது சரியாக பராமரிக்காத வயல்கள் அருகில் இருத்தல். தொடர்ச்சியான பெருக்கத்திற்கும் பரம்பலுக்கும் வழி வகுக்கும்.

**எதிரான காரணிகள் குறைந்தோ அன்றி இல்லாமலோ போதலுமே**

**உதாரணமாக:**

5. வெண் முதுகு தாவரத்தத்தி (WBPH) க்கு எதிர்ப்பின நெல் வர்க்கம் எதுவும் இல்லாத நிலையில் கபிலத் தாவரத்தத்தி (BPH) க்கு எதிர்ப்பின நெல் வர்க்கம் பயிரிடப்பட்டால் கபிலத் தாவரத்தத்தி (BPH) யுடனான போட்டி இருக்காது.

6. இயற்கை சூழலில் காணப்படும் இவற்றின் எதிரிகளான இரைகௌவிகள் (Predators) ஒட்டுண்ணிப் பூச்சிகள் (Parasitoids), பூச்சி நோயாக்கிகள் (entomopathogens)என்பன வயலில் இருந்து அகற்றப்படல். இந்நிலை இப்பீடைக்கென சிபாரிசு செய்யப்பட்ட பூச்சி மருந்துகளை விசிறாமல் பரந்த வீச்சம் (broad spectrum) கொண்ட பூச்சி மருந்து பாவனையாலும் ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாத மருந்துகளைக் கலந்து விசிறுவதாலும் ஏற்படுகின்றது.

**இவ் வெண் முதுகு தாவரத்தத்தி (WBPH)க் குடித்தொகை அதிகரிப்பிற்கு காரணமாகும்.**

இரைகௌவிகளான சிலந்தி வகைகள் மற்றும் தத்திகளின் முட்டைகளையும் அணங்குகளையும் தேடி உண்ணும் பச்சை நிற <u>Cyrtothinus lividipennis</u> Reuter, வயலில் இருந்து அகற்றப்படல், இப்பீடைப் பெருக்கத்திற்கு ஒரு மிக முக்கியமான காரணமாகும்.

இந்நிலை சீர்செய்யப்படாவிட்டால் இனி ஒவ்வொரு தடவையும் பூச்சி நாசினி பாவித்த பின்னர் இப்பீடையின் பெருக்கத்தை தவிர்க்க முடியாமல் போகும்.

**கடந்த வாரம் விவசாயிகளிடம் அறிந்து கொண்ட பின்வரும் தகவல்களின் படி நிலைமைக்கு யார் அல்லது எது காரணம். வாசகர்களாகிய நீங்களே புரிந்து கொள்ளுங்கள்.**

1.தனது வயலுக்கு அருகில் காணப்பட்ட பூச்சி நாசினி விசிறப்படாத வயலையிட்டும் பூச்சிக்குத் தீனி போடும் அந்த வயல் சொந்தக்காரரைப் பற்றியும் நொந்து கொண்டார் ஓர் விவசாயி.

2. இன்னொருவர் கர்ம சிரத்தையாக பூச்சி நாசினியையும் பங்கசு நாசினியையும் (ஹெக்சா- டாஸ்) ஒன்றாகக் கலந்து விசிறிக் கொண்டிருந்தார். பத்திரிகைகளில் வெளியான விவசாய திணைக்களத்தின் ஆலோசனையை படித்த பின்னரும் ஏன் ஹெக்சா-டாஸ் கலக்கின்றீர்கள்? என வினவியதற்கு, **இலைகள் மஞ்சளாக வந்ததால் இந்த மருந்து அடிக்கின்றேன் என்றார்.** தத்திப் பூச்சியின் தாக்கத்தால் இலை மஞ்சளாகும் என்று தானே எழுதியிருக்கிறார்கள் என்று கேட்க ஏன் இதுன்ர மணத்திற்கும் பூச்சிகள் இந்த (?) வயலை விட்டு பறந்து போகும் தானே என என்னையே கேட்டார்.

3. பயிரிடப்பட்ட நெல் வர்க்கங்களைப் பற்றி வினவிய போது பலரும் கூறியது விவசாய திணைக்களம் இந்த நெல்லை விதைக்க வேண்டாம் என்றுதான் கூறியது. ஆனால், இதுதான் நல்ல விளைச்சலைத்தரும் என்பதால் நாங்கள் விதைத்தோம். கொஞ்சம் பூச்சித் தாக்கம் இருக்கும்தான். மருந்தை இரண்டு தரம் உண்டன அடிக்க அதெல்லாம் சரிவரும்.

இதற்குமேல் யார் என்ன சொல்வது? என்ன செய்வது? விவசாயிகளே தமது வயலுக்குள் பூச்சிகளை பீடைகளாக்கும் முயற்சிகளை முன்னெடுப்பதால் ஆராய்ச்சிகளும் ஆலோசனைகளும் வெறும் விழலுக் கிறைத்த நீராகிப் போவதைக் கண்கூடாகக் கண்டேன்.


**கலாநிதி (திருமதி) இ.ஞானேஸ்வரன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**தலைவர்,**
**விலங்கியல் துறை,**
**யாழ்பாணப் பல்கலைக்கழகம்.**


## வாரத்திற்கு ஒரு புதிர்! 75

**$P+Q+R= S+T+U$ ஆகவும் $P^2+Q^2+R^2= S^2+T^2+U^2$ ஆகவும் வருமாறு சாத்தியமான இரு தொடர்புகள் தரப்பட்டுள்ளன. இவற்றை பயன்படுத்தி P, Q, R, S, T, U என்பவற்றின் பொருத்தமான பெறுமானங்கள் எவை?**

**விடைகளை 14.01.2013 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**து.பிரதீபன்**
**ஆசிரியர், பிரிவு -A**
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,**
**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,**
**மானிப்பாய்.**

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 74 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கபாலினி ஆனந்தஜோதி**
**கோண்டாவில் வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**புதிர் 74 இற்கான கேள்வியும் விடையும்:**

$(10X+Y)^2 = 100X+10Z+Z, (10Y+X)^2 = 100Z+10Z+X$


**எனின் X,Y,Z இன் பெறுமானங்களை தருக?**

X=1, Y=2, Z=4

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 75

சரியான விடை:-..........................................................
முழுப்பெயர்:-..........................................................
முகவரி:-..........................................................
தொ.பே.இல:..........................................................
கையொப்பம்:..........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசுக்விசுக்குன்னு எட்டுவச்சு வாராரு கருத்தமாயி.

எல்லாரும் ஓடியாந்து கெணத்துக்குள்ள எட்டிப்பாத்தா- இதுவரைக்கும் தாய்ப்பாலு மாதிரி வெள்ளை வெளேர்னு வந்துவிழுந்த ஊத்து, இப்ப செக்கச்செவேல்ன்னு ஒழுகுது.

காடுகரையில சிதறிக்கெடந்த சாதிசனமெல்லாம் கொஞ்சநேரத்துல கூடிக்குமுஞ்சு போச்சு.

"இது என்னடா கூத்தா இருக்கு?"

ஊராளுகளோட சேந்து புங்கமரத்துக் காக்கா குருவி கருச்சான்குஞ் சொல்லிப் பசுமாடுக வேல நிறுத்தமாம்.

புத்திக்கு ஒண்ணும் எட்டல; யாரை யோசன கேக்கறது?

சிவபெருமானைக் கேக்கலாம்னா மார்க்கண்டேயன் விவகாரத்துல ஏற்பட்ட மனத்தாங்கல் இன்னும் தீரல. விஷ்ணுவப் போய்க் கேட்டுவரலாம்ன்னா நம்ம எருமைக்குப் பாற்கடல் நீந்திப்பழக்கம் இல்ல. பிரம்மாவைப் போய்க் கேக்கலாம்ன்னா அந்தாளு எந்த மூஞ்சிய எங்க வைச்சிருப்பாளுன்னே தெரியமாட்டேங்குது.

ஒண்ணும் புடிபடல எமதருமருக்கு.

அனுப்பிவைக்க ஆரம்பிச்சது, இன்னைக்கு வரைக்கும் நின்னபாடில்ல.

ஏற்கனவே மழை இல்ல- உழுக மாடில்ல-ஒண்டநெழல் இல்ல. வயித்துல ஈரத்துணியக் கட்டிட்டுப் படுத்திருக்கான் வெவசாயி. இந்த லச்சணத்துல கெணத்துத் தண்ணி ரத்தமா ஒழுகுதுன்னா வகுத்துல தீப்பிடிக்குமா புடிக்காதா?

கருத்தமாயி கெணத்துல ரத்தம்னு சேதி கேட்டதும் எல்லாரும் அவுகவுக கெணத்த எட்டி எட்டிப் பாத்துருக்காக.

"யாத்தே என் கெணத்துலயும் ரத்தம்" நெஞ்சிலடிச்சு ஓடி வந்தா ஒத்த வீட்டு மூளி.

"ஆமாப்பா என் கெணத்துலயும் செகப்பா ஒழுகுதப்பா" கட்டாப்பு வழியாக் கத்திவாராரு கெடாவீரன்.

கருத்தமாயி கெணத்தச் சுத்தி ஹே...ஹேன்னு கூடியிருச்சு கூட்டம்.

எல்லோரும் எட்டி எட்டிப் பாக்குறாக கெணத்துக்குள்ள. கெணறு பழைய கெணறு; சுத்தி முள்ளு மண்டிக் கெடக்கிற மொட்டக் கெணறு.

தென்மேற்கு மூலையில் மொத்தம் மூணு ஊத்து. அதுல ஒண்ணு எப்பவும் காசு கேட்டுக் கண்ணக் கசக்கற சவலப்புள்ள மாதிரி- தண்ணி வந்தும் வராம ஒழுகிக்கிட்டிருக்கும்.

# மூன்றாம் உலகப்போர்

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

04

அது உண்மையோ பொய்யோ- பொலம்பிட்டாரு கருத்தமாயி:

"எந்தப் பொசக்கெட்ட சிறுக்கியோ எந்தோட்டத்துக்குள்ள வந்து பொழப்பை கெடுத்திட்டுப் போயிட்டாளே."

சிட்டம்மாவுக்கு சுருக்கின்னு தச்சிருச்சு.

புருசனக் கட்டி ஏறிக் காதறுக்க ஆரம்பிச்சிட்டா. "ஏ வெள்ளாட்டங் குட்டி! இந்த வேலையெல்லாம் எங்கிட்ட வச்சுக்கிற வேணாம்ன்னு சொல்லு. எங்களுக்கெல்லாம் நின்னு நெடுங்காலமாகிப் போச்சு. இந்தாளத் தேடி எந்தச் சக்களத்தி வந்துட்டுப் போனாளோ கண்டுபுடிச்சு அவளக் காது அக்கல (அறுக்கல) நான் சிட்டம்மா இல்ல".


கருத்தமாயி ஒரு மஞ்சட்டி எடுத்தாரு. வேப்பம்பட்டையும் புளியம்பட்டையும் நெப்பிச் சட்டியில கங்கள்ளிப்போட்டாரு. அதில பொசுபொசுன்னு புகை வரவும் மஞ்சட்டியில கயிறுகட்டிதோட்டம் பூராப் புடிச்சு நடந்துட்டாரு.

அதுக்குண்டான வைத்தியம் அதுதானாம்.

தண்ணி மோட்டார் ஓடிக்கிட்டிருக்கு. கையில புடிச்சுவந்த வெள்ளாட்டங்குட்டியை வேப்பம்புட்டியில கட்டிவிட்டுட்டுக் கெணத்தடிக்கு வந்த சிட்டம்மா பலகைக் கல்லுல ஒக்காந்து பையெடுத்தா வெத்தல போட. எதார்தமாக் கெணத்த எட்டிப்பாத்தவ பதறிப்போனா.

"ஏலே ஐயா சின்னப்பாண்டி! இங்க வந்து பாருங்கடா; கெணத்துல ரத்தம்".

தக்காளிக்குத் தண்ணிகட்டிக்



கிட்டிருந்த இளையமகன் சின்னப் பாண்டி மம்பட்டிய வாய்க்கால்ல எறிஞ்சிட்டு ஓட்டமா ஓடிவர்றான். மஞ்சட்டியை வரப்பில வச்சுட்டு

செல்லாம் காச் மூச்சுன்னு கத்துதுக.

### எமதருமன் நல்லாட்சி...!

ஒருகத சொல்லுவாக ஊருல.

எமலோகம் இருக்கே எமலோகம் அங்க பாவபுண்ணியக் கணக்குப் பாப்பாகளாம். பாவம் பண்ணுன ஆளுக இடப்பக்கம் நிப்பாகளாம்; புண்ணியம் பண்ணுன ஆளுக வலப் பக்கம் நிப்பாகளாம்.

புண்ணியம் செஞ்சவக சொக்கத்துக்குப் போங்கன்னு அனுப்பிச்சிருவாகளாம்; ஊர்வசி ரம்பையெல்லாம் வருவாகளாம் ஒத்தாசைக்கு.

பாவம் செஞ்ச ஆளுகள எமதர்மன் ஆளுக இரண்டு கையும் புடிச்சு "வாங்கய்யா வாங்க"ன்னு கூட்டிட்டுப்போய் கொதிக்கிற எண்ணெய்க் கொப்பரையில வீசுவாகளாம். பாம்புப் புத்துக்குள்ள படுக்கப்போடுவாகளாம். எரியிற தீயில தலைகீழாக் கட்டித் தொங்க விடுவாகளாம்.

இப்பிடி எமதர்மன் நல்லாட்சி நடத்திவந்த காலகட்டத்துல ஒரு நாளு பெருங்கூத்தாகிப் போச்சாம் எமலோகத்துல.

அந்த வருசம் ஏடுபோட்டுப் பாத்ததுல புண்ணியம் பண்ணுனவக ஏழெட்டுப்பேர்தானாம். பாவம் பண்ணுனவக பட்டியல் எடுத்துப்பாத்தா அது போகுதாம் லட்சக்கணக்குல.


எமதர்மருக்குத் தல சுத்துது; கூடவே கிரீடமும் சேந்து சுத்துது.

கொப்பரை கட்டுப்படியாகுமா எண்ணெய் விக்கிற வெலையில?

அத்தன பாம்புகளுக்கு எங்க போறது? நாகலோகத்துல வேற நாலு மாசமாப் [illegible]

பாசக் கயித்துல அவரா முடிச்சுப் போட்டு அவரா அவுத்துக்கிட்டிருக்காரு ரொம்ப நேரமா.

திடீர்ன்னு தம்புராவோட ஒரு பாட்டுக்கேக்குது. நிமிந்து பாத்தா-



வைகுண்டத்துல வடை சாப்பிட்டிட்டுக் கைலாசத்துக்குக் காப்பி சாப்பிடப் போய்க்கிட்டிருக்காரு நாரதரு.

"வாய்யா வாய்யா"ன்னாரு எமதருமரு. வந்தாரு நாரதரு.

"எனக்கொரு பிரச்சின..." இழுத்தாரு எருமைக்காரரு.

## என் கெணத்திலயும் செகப்பா ஒழுகுதப்பா...!

"என்ன? கள்ளக்கணக்கு எழுதிக் காசு சம்பாரிச்சு இந்திரலோக வங்கியில போட்டு எமாத்துறானா சித்ரகுப்தன்?"

"அட அதில்ல நாரதரே. பாவக்கணக்குப் பண்ணுனவக எண்ணிக்கை கூடிப்போச்சு; எடமில்ல நரகத்துல; என்ன பண்றதுன்னு யோசிக்கறேன்".

"அட நீங்க ஒண்ணு... இவுகள நரகத்துல தள்ளணும் அவ்வளவுதான? நான் பறந்துபறந்து பாத்த அளவுல பூலோகத்துல இந்தியா இந்தியான்னு ஒரு தேசம் இருக்கு. இவுகள பூரா அங்க வெவசாயம் பண்ண அனுப்பி வச்சீங்கன்னு வச்சுக்குங்க வேலை முடிஞ்சது."

"ஆகா ஒம்மக் கட்டித் தழுவணும் போல இருக்கு"ன்னு எந்திருச்சாரு எமதருமரு.

தம்புராவத் தவறவிட்டுட்டு ஓடி ஒளிஞ்சுபோனாரு நாரதரு.

நாரதர் சொன்ன யோசனப்படி இந்தியாவுல விவசாயம் பண்ண [illegible] இருந்து அன்னைக்கு

கடன் கேட்டுப்போனா சில கஞ்சப் பயலுக சலசலன்னு பேசிக்கிட்டேயிருந்துட்டுக் கடைசியில கைய விரிச்சிருவாக பாருங்க. அந்த மாதிரி ரெண்டாம் ஊத்து, சத்தம் மட்டும் வரும்; சலவை வராது.

மூணாவது ஊத்து இருக்கே...

பொட்டச்சிக்கு, பொறந்த வீட்டுச் சீதனம் மாதிரி. செழிப்பான காலத்துல மூட்ட மூட்டையா வரும். பஞ்சகாலத்துல பையிலயாவது வந்து சேந்துரும். வராம இருக்காது.

இப்ப மூணும் ஒழுகுது செக்கச் செவேர்னு.

"அழியப்போகுதா உலகம்?" அறிகுறி காட்டறாளா ஆத்தா பூமாதேவி?

பட்டாளம்மன் கோயில் மரத்துல இடி விழுந்தப்பவே சொன்னேன்... சாமிகுத்தம் ஆகப்போகுதுன்னு... ஆயிருச்சா இல்லையா?

"இனி வெவசாயம் பண்ணி வெளங்கிரும்"

"வெளச்சல் இருந்தா வெலை இருக்காது; வெலை இருந்தா வெளச்சல் இருக்காது. காசு இருந்தா ஆள் கெடைக்காது. ஆள் கெடைச்சா காசு இருக்காது; கரண்டு இருந்தா தண்ணி இருக்காது; தண்ணி இருந்தா கரண்டு இருக்காது. இந்த லச்சணத்துல கெணறு வேற ரத்தக் கண்ணீர் வடிச்சா எந்தக் கோயில்ல போயி சூடம் காமிக்கிறது?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

330

## துறவறம் எது?



வெகுகாலத்திற்கு முன் சுவேதாரண்ணியத்தில் இரு முனிவர்கள் ஆசிரமங்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர். ஒருவர் கங்காதரர். மற்றவர் லீலாதரர்.

ஒருநாள் லீலாதரர் கங்காதரரிடம் நான் இந்த ஆசிரமத்தை விட்டு நகரத்திற்குப் போய் கொஞ்சநாட்கள் அங்கிருக்க நினைக்கிறேன். இந்த ஆசை நீண்டகளாக என் மனதில் உள்ளது. அதனை அடக்கமுடியவில்லை என்றார். கங்காதரர் புன்னகை புரிந்தவாறே சரி போய் வாருங்கள். உங்கள் ஆசிரமத்தை நான் பார்த்துக்கொள்கிறேன் என்றார்.

லீலாதரர் நகருக்குச் சென்றார். அங்குள்ள வாழ்க்கை முதலில் இனிமையாக இருந்தாலும் போகப்போக அவர் அதை வெறுக்கலானார். மக்களிடையே போட்டி, பொறாமை, சூது, வாது, மோசடி, சதிபோன்ற இயல்புகளைக் கண்டு அவர் மனம் நொந்து விரைவிலேயே தம் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தார்.


அவர் கங்காதரரிடம் தாம் நகரில் கண்டவற்றை எல்லாம் கூறவே கங்காதரர் பதில் எதுவும் கூறாமல் புன்னகை புரிந்தார். அப்போது லீலாதரர் மனிதர்களின் இயல்புகள் எல்லாம் மிகவும் மோசமானது என்று தங்களுக்குப் புரியவில்லையா? என்று கேட்டார்.

அப்போது கங்காதரர் நீங்கள் துறவறம் மேற்கொண்டதே இத்தகைய தீய குணங்களை விட்டொழிந்து விட்டு கடவுளை தியானம் செய்யத்தானே. ஆனால் நீங்கள் இங்கு வந்தபோதே அவற்றை முற்றிலும் விட்டொழிக்காமல் இருந்ததாகத் தெரிகிறது. அதனால்தான் நகர வாழ்க்கையை விரும்பிச் சென்றீர்கள். மீண்டும் அவற்றைக் கண்டு வெறுப்புற்று வந்திருக்கிறீர்கள். இனியாவது உலக ஆசாபாசங்களை விட்டுவிட்டு கடவுளை தியானிப்பதிலேயே மனதைச் செலுத்துங்கள் என்றார்.

லீலாதரர் உண்மைத்துறவறம் எது என அறிந்து அப்போது முதல் கடவுள் தியானத்தில் முழு மனதைச் செலுத்தினார்.

## கனவு பலித்தது

## அம்புலிமாமா கதைகள்



ஹேலாபுரியில் ஆண்டுக்கொரு முறை கவிதை விழா நடக்கும். அன்று ராஜ்யத்தின் பல நூற்றுக்கணக்கான கவிஞர்கள் தங்கள் கவிதைகளை மன்னர் முன் வாசித்துக் காட்டுவார்கள். அவற்றுள் சிறந்ததென மன்னர் கருதும் கவிதையை இயற்றிய கவிஞருக்கு அவர் விரும்பும் பரிசு அளிக்கப்படும்.

வழக்கப்படி அந்த ஆண்டும் விழா நடந்தது. ஏராளமான கவிஞர்கள் தங்கள் கவிதைகளை மன்னருக்குப் படித்துக்காட்டினர். அவர்களுள் சோமகவி மிகச்சிறந்த கவிஞனாக மன்னரால் தேர்வு செய்யப்பட்டான். சோமகவியை எல்லோர் முன்னிலையிலும் பாராட்டிய மன்னர் பின்பு அவனை நோக்கி நீ விரும்பும் பரிசு எதுவானாலும் கேள்! நான் உனக்குத் தருவேன் என்றார்.

அரசே என் பாதங்கள் இனி எப்போதும் தங்கத்தின் மீதுதான் நடக்கவேண்டும். அதற்காக வேண்டி இனி எந்தப் பாதைகளில் நடந்து சென்றாலும் என் பாதங்கள் தங்கத்தைத் தொட்டுக்கொண்டே செல்லவேண்டும் என்றான்.

சோமகவியின் பைத்தியக்காரமான பேராசையைக் கேட்டு அனைவருமே திடுக்கிட்டனர். அதாவது இனி அவன் எந்தப்பாதைகளில் தங்கத்தகடுகள் பொருத்தவேண்டும் இப்படிப்பட்ட படுபாதகமான பேராசைக்கார கவிஞனின் விருப்பத்தை மன்னர் எப்படி நிறைவேற்றப் போகிறார் என்று அனைவரும் வாயடைந்து சிலையாக நின்றனர்.

ஆனால் மன்னர் சோமகவியின் ஆசையை நிறைவேற்றிவிட்டார். எப்படி? இமயமலை யளவு தங்கம் இருந்தாலும் போதாதேயென்று யோசிக்கிறீர்களா? சோமகவியின் பாதங்களில் அவன் என்றுமே கழற்றமுடியாதபடி தங்கத்தாலான செருப்புக்களைப் பொருத்திவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2, 3 ஆம் பாதங்கள்**

**குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும்! நல்ல யோசனைகளை எல்லோருக்கும் எடுத்துரைக்கும் மிதுன இராசி நேயர்களே!**



மாற்றங்களையும் ஏற்றங்களையும் விரும்பும் உங்களுக்கு புத்தாண்டு ஒரு பொன் கொழிக்கும் ஆண்டாக அமையப்போகிறது. வருடத்தொடக்கத்திலேயே தனாதிபதி சந்திரன் சொந்த வீட்டிலேயே சஞ்சரிக்கிறார். தனாதிபதி நன்றாக இருந்தால் வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும் அல்லவா? எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்திக் கொள்பவர்கள் நீங்கள். சாதுர்யமாகப்பேசி சச்சரவுகளை தீர்ப்பீர்கள்.

சகல விடயங்களையும் நீங்கள் அறிந்திருந்தாலும் அதை மற்றவர்கள் சொல்கின்ற பொழுது தெரியாதது போல கேட்டுக்கொள்வீர்கள். அவர்கள் அத்தனையும் சொல்லி முடித்த பின்னால் எனக்கு இதெல்லாம் முன்பே தெரியும் என்று சொல்வீர்கள்.

வருடத் தொடக்கத்தில் குரு வக்ர கதியில் இருக்கிறார். சுக்கிரன் 6 இல் மறைந்திருக்கிறார். 12க்கு அதிபதி 6 இல்

# 2013 புத்தாண்டு பலன்கள்



**சிவல்புரி சிங்காரம்**

மறைந்து, வக்ர குருவால் பார்க்கப்படும் பொழுது நீண்டநாட்களாக நடைபெறாத காரியங்கள்கூட நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

தடைகளை தகர்த்து எறியும் ஆற்றல் சில கிரகங்களுக்கு உண்டு. அங்ஙனம் பார்க்கும் கிரகங்களை பலப்படுத்த வேண்டுமானால் நாம் பரிகாரங்களை முறையாக செய்யவேண்டும். செய்யும் பரிகாரங்கள் திருப்திகரமாக அமையும் பட்சத்தில் வையகம் போற்றும் வாழ்க்கை உங்களுக்கு அமையும்.

வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசியை கேது பார்க்கிறார். கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதியும் பொழுது சிலசமயங்களில் திடீர் பிரச்சினைகளும் வந்துசேரலாம். எனவே, இராகு-கேதுக்களுக்கு பரிகாரமாக சர்ப்ப சாந்திகளை வருடத்தொடக்கத்தில் முதல் இரண்டு மாதங்களுக்குள் செய்து கொள்வது நல்லது.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலைகளின் கட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். வருடம் பிறந்தநாள், வரும் பெரிய கிரகங்களின் மாற்றங்கள் உருவாகும் நாள் ஆகிய

# இதுவரை எண்ணியிருந்தவை ஈடேறும்

நிகழ்ச்சிகளின்போது உங்கள் தெசா புத்தியை கணக்கிட்டு அதற்குரிய வழிபாடுகளை மேற்கொண்டால் எடுத்தகாரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

2013 ஆம் ஆண்டு எண் கணிதப்படி சுக்கிரனுக்கு உரிய ஆண்டு. 6 எண் ஆதிக்கத்துக்குரிய ஆண்டாக கருதப்படுகிறது. உங்கள் இராசிநாதன் புதனும் சுக்கிரனும் இணைந்து புத, சுக்ர யோகம் அமைந்த ஜாதகத்தை

நீங்கள் பெற்றிருந்தால் தொழில் வளர்ச்சியும் தொகை வரவும் அதிகமாக வந்து சேரும்.

இல்லை என்றாலும் சுக்ரன், புதன் இவற்றின் அடிப்படையில் பாதசார பலம்பார்த்து அந்த கிரகத்திற்குரிய எண் ஆதிக்கத்தில் தொழில் நிலையத்தின் பெயரை அமைத்துக்கொண்டால் இலாபம் சீராக வந்துகொண்டேயிருக்கும்.

**01.01.2013 முதல் 27.05.2013 வரை**

வருடத் தொடக்கத்தில் குரு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து அதன் பார்வை பலத்தால் 4, 6, 8 ஆகிய இடங்களை புனிதப்படுத்துகிறார். எனவே, பாயில் படுத்து நோயில் கிடப்பவர்கள்கூட பம்பரமாகப் பணிபுரிய வாய்ப்புகள் கைகூடி வரலாம். வீடுகட்டும் முயற்சியில் இருந்த வில்லங்கங்கள் அகலும். பத்திரப்பதிவுகளில் இருந்த தாமதங்கள் அகலும். புத்திரர்களால் வருமானமும் புதிய உத்தியோகங்கள் கிடைப்பதற்கான அறிகுறியும் தோன்றும்.

குறிப்பாக இடமாற்றம், வீடுமாற்றம், தொழில் மாற்றம் செய்யும் சிந்தனை மேலோங்கும். அங்ஙனம் மாற்றத்தை விரும்புபவர்கள் ஜாதகத்தில் பயண ஸ்தானம் நன்றாக இருந்தால் மாறிக் கொள்ளலாம். இல்லையேல் இருக்கும் இடத்திலேயே இருப்பது நல்லது.

வீடு வாங்க வேண்டும். வாகனம் வாங்க வேண்டும் என்ற எண்ணம் கைகூடவில்லையே என்று ஏங்கியவர்கள், இந்த புத்தாண்டில் மகிழ்ச்சியடையும் விதத்தில் அவைகள் கைகூடும். கல்வி தடை அகலும். பலமுறை தேர்வு எழுதியும் வெற்றிபெறவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது ஆர்வத்தோடு தேர்வு எழுதினால் அதில்



மி
து
ன
ம்

வெற்றிபெற்று பட்டமும் பெறமுடியும். தாயின் உடல்நலம் சீராகும். தாய்வழி ஆதரவோடு சில நல்லகாரியங்களை செய்து முடிப்பீர்கள். பழைய வாகனத்தை விற்றுவிட்டு புதிய வாகனம் வாங்குவீர்கள்.

குரு 12 இல் இருக்கும்வரை நிறைய விரயங்களே உங்களுக்கு காத்திருக்கும். ஆனால், அவை நல்ல விரயங்களாகவே ஏற்படும். பெண்களின் சுபச்சடங்குகள், பெற்றோர்களின் மணிவிழாக்கள் அல்லது குடும்பம் சம்பந்தப்பட்ட வகையில் முன்னோர்களால் கட்டப்பட்ட [illegible] முடிவுக்கு

விழா நடத்துவதற்கான வாய்ப்புகள் கைகூடிவரும்.

6 க்கு உரிய செவ்வாய் 8 ஆம் இடத்தில் மறைய அவரை 12 ஆம் இடத்தில் குரு பார்ப்பதால் கூட்டுத் தொழில் மாற்றம் ஏற்படலாம். கூட்டாளிகள் கோபப்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. பழைய பங்குதாரர்கள் விலகி புதியபங்குதாரர்கள் சேரலாம். மனைவி அல்லது மக்கள் பெயரில் நீங்களும் கூட்டு சேர்ந்து பழைய தொழிலை புதிய விதத்தில் மாற்றிக் கொள்ளலாம்.

**28.05.2013 முதல் 31.12.2013 வரை**

குரு மிதுனத்தில் சஞ்சரிக்கும் நேரமிது. அதன்பார்வை பதியும் இடமெல்லாம் புனிதம் அடைந்து பலவித நன்மைகளை உங்களுக்கு வழங்கப் போகிறது. குறிப்பாக 5,7,9 ஆகிய இடங்களில் குருவின் பார்வை பதிவதால் பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பிரபலமானவர்களின் ஒத்துழைப்போடு எல்லாக் காரியங்களையும் நல்லவிதமான நடத்திக் காட்டுவீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். பெருமைக்குரிய முன்னோர்கள் பிள்ளைகளின் நலன்கருதி வாங்கிப்போட்ட சொத்துக்களை இப்பொழுது விற்று தடையில்லாமல் செலவழிப்பர். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

கல்யாணம் ஆகாத காளையருக்கும் கன்னியருக்கும் வாயில் தேடி வரன்கள் வந்து அலைமோதும். வந்த ஜாதகத்தில் எந்த ஜாதகமும் பொருந்தவில்லையே என்று இதுவரை கவலைப்பட்டவர்கள், இப்பொழுது ஒன்று, இரண்டு ஜாதகங்கள் பொருந்தி ஒத்து வருகிறதே, பேசி முடித்துக் கொள்ளலாமா என்று சொல்வார்கள். விவாகரத்து பெற்றவர்களுக்குகூட விருப்பங்கள் நிறைவேறும். வெளிநாட்டு யோகமும் ஒரு சிலருக்கு வந்துசேரலாம்.

கடித அனுகூலம் உண்டு. கூட்டாளிகள் கூடுதல் இலாபம்பெற வழிவகுப்பர். சகோதர வர்க்கத்தினர் ஒருசிலர் ஒத்துவராவிட்டாலும் ஒருசிலர் உங்கள் முன்னேற்றத்திற்கு ஒத்துவருவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தலைமைப் பதவிகள் தானாக தேடி வரும்.

**குருவின் வக்ர காலம்!**

உங்கள் இராசியைப் பொறுத்தவரை 7, 10க்கு அதிபதியாக குரு விளங்குகிறார். அப்படிப்பட்ட ஸ்தலங்களுக்கு அதிபதியாக விளங்குபவர் வக்ரம் பெறுவது யோகம்தான். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். நல்லவர்கள் என்று நம்பி சேர்ந்த கூட்டாளிகள் ஏமாற்றி விட்டார்களே என்ற கவலை மாறப்போகிறது. அவர்கள் உங்களுக்கு தரவேண்டிய பாக்கிகளை தானாகவேகொண்டு வந்து தருவர். பொதுவாக ஆதாயம் அதிகரிக்கும் நேரமிது. அடுத்தவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**சனி, செவ்வாய் பார்க்கும் காலம்!**

ஒரு கிரகத்தை ஒரு கிரகம் பார்க்கும்பொழுதும் ஒரு கிரகம் ஒரு கிரகத்தோடு சேரும்பொழுதும் அதன் தன்மைகள் மாறுபடுகின்றன. மனிதர்கள் எப்படி கூட்டாளிகளால் குணம் மாற்றப்படுகிறார்களோ, அதேபோலத்தான் கிரகங்களின் நிலையும்.

சேர்க்கையினாலும் பார்வையினாலும் ஆச்சரியப்படத்தக்க பலன்களும் நடைபெறும். ஒருசிலருக்கு அதிக போராட்டங்களையும் உருவாக்கும். அந்த அடிப்படையில் 5 ஆம் இடத்தில் உள்ள சனியை செவ்வாய் பார்க்கும்பொழுது கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

நாணயப்பாதிப்புகள் ஏற்படலாம். நல்லவர்கள் உங்களை விட்டு விலகி செல்லலாம். குறைந்த முதலீட்டில் தொடங்கிய தொழில் பெரியளவில் வளர்ச்சியடையும் நேரத்தில் பணியாளர்களின் பிரச்சினைகள் உருவாகலாம். கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு கூடும். உடனிருப்பவர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டு, விலகி கொள்ளலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். கவலைகள் தீர கடவுள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். குறிப்பாக அங்காரகனையும் ஆதியந்த பிரபுவையும் வழிபட்டால் தொல்லைகள் தீரும்.

மிதுன இராசியில் பிறந்த உங்களுக்கு புத்தாண்டில் சுபவிரயம் அதிகரிக்கும். புனித பயணங்களை மேற்கொள்வர். வாங்கல்-கொடுக்கல்களில் வருடத்தின் முன்பகுதியில் ஏமாற்றங்களை சந்தித்தாலும் பிற்பகுதியில் அதை ஈடுகட்டும் விதத்தில் வருமானம் வந்து சேரும். கணவன், மனைவிக்குள் விட்டுக் கொடுத்து நடந்து கொண்டால் ஒற்றுமை பலப்படும்.

குரு பெயர்ச்சிக்குப் பின்னால் எண்ணங்கள் நிறைவேறும். நீண்டநாட்களாக நடைபெறாமல் இருக்கி றதே என்று நினைத்த மங்கள நிகழ்ச்சியில் ஏப்ரல் மாதத்திற்கு மேல் வரிசையாக நடைபெறப்போகிறது. பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் ராகுவும் 11 இல் கேதுவும் சஞ்சரிக்கும் பொழுது அதன்பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. களத்திர ஸ்தானத்திலும் பதிகிறது. அதற்குரிய பரிகாரமாக சர்ப்பசாந்தியை செய்து கொண்டால் சந்தோஷத்தின் எல்லைக்கு செல்ல முடியும். சனி, செவ்வாய் பார்வை காலத்தில் சனி பரிகாரமும் அங்கார பரிகாரமும் செய்தால் சகஜ நிலைக்கு வரமுடியும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறவும், நலம் யாவையும் வீடு வந்து சேரவும் விஷ்னுவை வழிபட்டு வருவது நல்லது. உங்கள் பிறந்ததிகதி மற்றும் கூட்டுத்தொகைக்குரிய எண்களின் ஆதிக்கம் பார்த்து அதற்குரிய தெய்வங்களையும் தேர்ந்தெடுத்து வழிபாடு செய்தால் ஆச்சரியப்படத்தக்க வாழ்க்கை அமையும். அங்காரக பரிகாரம் அவசியம் தேவை. தங்கு தடைகள் தானாக விலகும்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு முதல்வர் தூக்கியுள்ள ஆயுதம்...

டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்த கையோடு 31.12. 2012 அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் செயற்குழு மற்றும் பொதுக்கூட்டத்தைக் கூட்டினார் அக்கட்சியின் பொதுச் செயலர் ஜெயலலிதா. ஒன்றரை வருடங்கள் ஆட்சியை நிறைவு செய்யும் அவர். அடுத்த சில மாதங்களிலோ அல்லது விரைவிலோ நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்பதற்கான முஸ்தீபுகளை முடுக்கி விட்டுள்ளார். பொதுக் குழுவில் பேசியவர்கள் அனைவருமே, தமிழகம் மற்றும் பாண்டிச் சேரியில் உள்ள 40 நாடாளுமன்றத் தொகுதிகளையும் கைப்பற்றும் லட்சியம் பற்றியே விரிவாக பேசியிருக்கிறார்கள்.

இந்த ஒன்றரை ஆண்டுகால ஆட்சியில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை எதிர்கொண்ட முக்கிய சவால்கள் இரண்டு. ஒன்று கடும் மின் வெட்டுப் பிரச்சினை. சட்டமன்றத் தேர்தலின் போது "நான் ஆட்சிக்கு வந்தால் மூன்றே மாதங்களில் மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பேன்" என்று அவர் அளித்த வாக்குறுதியை நிறை



வேற்ற பல்வேறு முயற்சிகளை எடுத்தார் மின்சாரவாரியத்திற்கு தனி யோர் அதிகாரிகள் குழுவை போட்டு, மின் வெட்டுப் பிரச்சினை மற்றும் மின் சாரத் திட்டங்களை முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றுவது பற்றி விவாதத்திற்கு வழிவகுத்தார். குறிப்பாக ஒவ்வொரு திங்கட்கிழமையும் இந்த மின்வெட்டுக்காக போடப்பட்ட அதிகாரிகள் குழுவுடன் முதல்வர் ஜெயலலிதா ஆலோசனை நடத்தினார். குளிர்காலத்தைத் தொடர்ந்து டெல்லி தங்களுக்கு வேண்டாம் என்று சரண்டர் செய்யும் 1700 இற்கும் மேற்பட்ட மெகாவோட் மின்சாரத்தை தமிழகத்திற்கு கொடுக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கோரிக்கை வைத்தார். பிறகு இந்தய சுப்ரீம் கோர்டில் இதற்காக வழக்குப் போட்டார்.

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிரான போராட்டத்தை ஆரம்பத்தில்ஆதரித்தாலும், கடும் மின்வெட்டால் வந்த அதிருப்தியை நீக்குவதற்கு அந்த போராட்டக்காரர்களுக்கு அளித்த ஆதரவை திரும்பப் பெற்றார். அந்த அணுமின் நிலையப் பணிகள் தொடருவதற்கு தமிழக பொலிஸ் மூலம் உதவி செய்தார். இப்போது கூடங்குளத்தில் முதற்கட்டமாக உற்பத்தியாகும் 1000 இற்கும் மேற்பட்ட மெகாவோட் மின்சாரத்தை முற்றிலுமாக தமிழகத்திற்கு கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அது மட்டுமின்றி, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து மின்சாரத்தையும் தமிழகத்திற்கே கொடுக்க வேண்டும் என்று சமிபத்தில் வெளிநடப்புச் செய்த தேசியவளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் குரல் எழுப்பியிருக்கிறார் முதல்வர் ஜெயலலிதா.

இதேபோல் காவிரி பிரச்சினை! காவிரி நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பின்படி திறந்துவிடப்பட வேண்டிய தண்ணீரை திறந்துவிட கர்நாடகம் தொடர்ந்து அடம்பிடிக்கிறது. பா.ஜ.க. வின் தேசிய தலைவர்களுடன் முதல்வர் ஜெயலலிதாவிற்கு நெருக்கமான அரசியல் உறவு இருக்கின்ற நேரத்தில் கூட பா.ஜ.க. முதல்வர் இருக்கும் கர்நாடக மாநில அரசு தமிழகமுதல்வரின் கோரிக்கையைத் தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. காரணம் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் கர்நாடகாவில் மாநில சட்டமன்ற தேர்தல் நடைபெறுகிறது. அதுபோன்ற நேரத்தில் கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீரை திறந்துவிட்டு தன் மாநில விவசாயிகளின் உணர்வுகளை புண்படுத்த அம்மாநில முதல்வர் ஜெகதீஷ் ஷட்டர் தயாராக இல்லை. அதேபோல் ஓரளவிற்கு மேல் கர்நாடக மாநில அரசுக்கு அழுத்தம் கொடுத்து, தண்ணீரை திறந்து வைக்க மத்திய அரசும் தயாராக இல்லை. ஏனென்றால் தமிழகத்தை விட அரசியல் ரீதியாக தங்களுக்கு செல்வாக்கு மிகுந்த மாநிலம் கர்நாடகம் என்று காங்கிரஸ் கருதுகிறது.

தமிழகத்தில் தி.மு.க. அல்லது அ.தி. மு.க.வுடன் கூட்டணி வைத்துத்தான் காங்கிரஸ், எம்.பி.க்களை பெறவேண்டும். ஆனால், கர்நாடகத்தில் கூட்டணி இல்லாமலேயே எம்.பி. தேர்தலில் எம்.பி. தொகுதிகளை கனிசமாகப் பெறமுடியும். அதேபோல் தமிழகத்தில் 1967 இற்குப் பிறகு காங்கிரஸால் ஆட்சிக்கே வர முடியவில்லை. ஆனால், கார்நாடகாவில் ஆட்சிக்கு வரும் கட்சியாகத் திகழ்கிறது காங்கிரஸ். இதுமாதிரியான காரணங்களால் காவிரிப் பிரச்சினை சுப்ரீம் கோர்ட்டிற்கே போனபிறகும் தீரவில்லை. மேட்டூர் அணைக்கு காவிரி நீர் வராததால் தமிழகத்தில் காவிரி டெல்டா பகுதிகளில் பயிர் செய்த நிலங்கள் வறண்டு கொண்டிருக்கின்றன. அதைப் பார்த்து வாடும் விவசாயிகள் சிலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். அதனால்தான் தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் பேசிய முதல்வர் ஜெயலிலதா "காவிரி பிரச்சினையில் மத்திய அரசு அரசியல் சட்டப்படி உள்ள தனது ரோலைச் செய்யத் தவறிவிட்டது" என்று கடுமையாக குற்றம் சாட்டினார்.

இப்படி தான், சந்திக்கும் முக்கிய பிரச்சினைகளை [illegible] மத்திய அரசு உதவ[illegible] கோபம் முதல்வர் ஜெயலலிதாவுக்கு இருக்கும் நேரத்தில் அ.தி.மு.க.வின் பொதுக் குழு, செயற்குழு போன்றவற்றை கூட்டி தீவிர ஆலோசனை நடத்தியிருக்கிறார். இப்பிரச்சினைகளை மையமாக வைத்து மத்திய அரசுக்கு எதிராக கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதேபோல் மின்சாரம் வழங்குவது தொடர்பான வலியுறுத்தல் தீர்மானங்கள் அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இது ஒரு புறமிருக்க சமீபகாலமாக எம்.ஜி.ஆர். புகழ் பரப்பும் பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன. குறிப்பாக சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர் நினைவகத்தில் இரட்டை இலை தோற்றம் போல் தூண் அமைக்கப்பட்டிருக்கிறது. அதை எதிர்த்து தி.மு.க.தரப்பில் போடப்பட்ட வழக்கில் "அது இரட்டை இலைஇல்லை" கிரேக்க குதிரைகளின் சிறகுகள் என்று அரசு தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் சொல்ப்பட்டிருப்பது வேறுவிடயம். இதுதவிர எம்.ஜி.ஆர். நினைவு தினம் ரொம்பவும் ஜோராக கொண்டாடப்பட்டது. அவரது நினைவிடத் தில் நின்று ஒன்றரை ஆண்டுகால ஆட்சியின் சாதனைகள் அனைத்தையும் பட்டியலிட்டு முதல்வர் ஜெயலலிதா தலைமையேற்க, நிதியமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் சாதனைக்கோசம் எழுப்பினார். ஜனவரி மாதம் 01 ஆம் திகதி கொடநாடு புறப்படுகையில் முதல்வர் ஜெயலலிதா நீலகிரி மாவட்டத்தில் எம்.ஜி.ஆர். சிலையொன்றையும் திறந்து வைப்பதாக இருந்தது. அ.தி.மு.க.வின் அசைச்சக்க முடியாத வாக்கு வங்கியாக இருக்கும் எம.ஜி.ஆர்.பக்தர்களை நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் முடுக்கி விடும் பணியாகவே இது தெரிகிறது. அதனால்தான் எம்.ஜி.ஆர். நினைவகத்தை புதுப்பித்து இரட்டை இலைச் சின்னம் வைத்ததற்கும் பாராட்டுத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

குறிப்பாக 29 ஆம்திகதி சென்னையில் பா.சிதம்பரத்தின் கலை இலக்கிய பேரவை சார்பில் நடைபெற்ற ப.சிதம்பரம்-ஒரு பார்வை என்ற புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்ற திமு.க. தலைவர் கருணாநிதி "சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற கோரிக்கை வைத்தார். சிதம்பரத்திற்கு தான் அளிக்கும் 67வது பிந்தநாள் பரிசாக இதை எடுத்துக்கொண்டு சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டும். அப்படிச் செய்தால், வரலாற்றில் சிதம்பரத்தின் பெயர் நிலைத்து நிற்கும்" என்றார். தி.மு.க. தலைவர் கருணாநிதியை மேடையில் வைத்துக் கொண்டு பேசிய கவிஞர் தமிழைச்சி தங்கபாண்டியன் "திராவிடமும் (தி.மு.க.வும்), தேசியமும் (காங்கிரசும்) இணைந்து இருக்கவேண்டும். கலைஞரும், ப.சிதம்பரமும் இதேபோல் என்றும் ஒற்றுமையுடன் இருக்கவேண்டும்" என்று பேசியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. முதலில் ப.சிதம்பரத்தின் இந்தப் புத்தகத்தை குடியரசு துணைத்தலைவர் ஆமீர் அன்சாரிதான் வெளியிடுவதாகப் பேசப்பட்டது. ஆனால், திடீரென்று அது மாற்றப்பட்டு தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் ப.சிதம்பரம் பற்றிய புத்தகம் வெளியிடப்பட்டது. தி.மு.க-காங்கிரஸ் உறவில் ஏதோ புதிய அத்தியாயம் தமிழக அரசியல் வானில் உதித்திருப்பதுபோல தெரிகிறது. இந்தப்புத்தக வெளியீடு தொடர்பான விளம்பரங்கள் வெளியிடப்பட்ட சூழ்நிலையில்தான் தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டம் டெல்லியில் நடந்தது. அதிலிருந்து மத்திய அரசைக் குறைகூறி வெளிநடப்பு செய்தார் முதல்வர் ஜெயலலிதா. குறிப்பாக சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு விவகாரத்தில் காங்கிரசை ஆதரித்து தி.மு.க., நாடாளுமன்றத்தில் வாக்களித்ததால் தி.மு.க. - காங்கிரஸ் உறவு தொடரும் சூழ்நிலை உருவாகியிருப்பதாகவே தமிழக் முதல்வர் ஜெயலலிதாவும் எதிர்பார்க்கிறார். அதனால், தி.மு.க.- காங்கிரஸ் அணி மீண்டும் தொடர்ந்தால் அதை சமாளிக்கவும், இந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதுப்புது யுக்திகளை ஆலோசித்துள்ளார்.

பொதுவாக ஒரு கட்சியின் பொதுக் குழுவைக் கூட்டுவது என்பது கீழ் மட்டத்திலிருந்து பல்வேறு மாவட்டங்களில் இருந்துவரும் கட்சிப் பிரமுகர்களை பேசவிடுவதற்குத்தான். அப்படிப் பேசும்போதும் ஆங்காங்கு நிலவும் சூழ்நிலைகளை கட்சியின் தலைவர் என்ற முறையில் ஜெயலலிதா தெரிந்துகொண்டு அதை ஆட்சியின் தலைவர் என்ற முறையில் சரிசெய்ய முனைவார். இப்படி பரபரப்பாக கூடிய பொதுக்குழுவில் மின்வெட்டிற்கு சென்ற முறை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியே காரணம் என்பதை கிராமங்கள்தோறும் பிரசாரம் செய்ய கட்சிநிர்வாகிகளுக்கு உத்தரவிட்டு நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதிற்கும் நாற்பது தொகுதிகளையும் கைப்பற்ற வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதேபோல் இப்போதைக்கு பா.ஜ.க.வுடனோ, காங்கிரசுடனோ கூட்டணி இல்லையென்று பொதுக்குழுவிற்கு முன்பு நடைபெற்ற செயற்குழுவில் அவர் பேசியதாகவும் செய்திகள்.

எதிர்பார்த்தபடியே தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்றபோது பேசுவதற்குப் போதிய நேரம் கொடுக்காத மத்திய அரசைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் பொதுக் குழுவில் பேசிய புதியவரான (வைகோவின் ம.தி.மு.க.விலிருந்து விலகி சமீபத்தில் அ.தி.மு.க.வில் சேர்ந்தவர்) நாஞ்சில் சம்பத், "அம்மா இப்போது செயின்ட் ஜார்ஜ் (சென்னை) கோட்டையில் இருக்கிறார். அவர் எதிர்காலத்தில் டெல்லிக்குப் போவார்" என்று கூறி, அடுத்த பிரதமர் ஜெயலலிதாவே என்று பொதுக் குழுவில்அடித்துப் பேசியிருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலில் 40 இற்கு 40 என்றபதுதான் அ.தி.மு.க. பொதுக்குழுவின் இலக்கு. இப்போதைக்கு கூட்டணி இல்லை என்ற ரீதியில் அவர் அறிவித்திருந்தாலும் அவரது அந்த இலக்கினை அடைய நிச்சயம் கூடடணி வேண்டும் என்பதே பொதுக்குழுவிற்கு வந்திருந்த அ.தி.மு.க.வினரின் உணர்வாக இருந்தது.

40 தொகுதிகள் என்பதுதான் இந்த அ.தி.மு.க.பொதுக்குழுவில் மீண்டும் வலியுறுத்தப்பட்ட முழக்கம்.

**காசிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர மொழியை கற்பதன் மூலம் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம்

## நாமல் எம்.பி. நம்பிக்கை

(கொழும்பு)

**சிங்களவர், தமிழர், முஸ்லிம் என பாகுபாடு காட்டாமல் அனைவரும் இலங்கையர் என்ற அடிப்படையில் சமமாக மதிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நல்லிணக்கத்தில் இளைஞர்களின் பங்கு எனும் தலைப்பிலான தேசிய மாநாட்டினை சர்வதேச உறவு மற்றும் தந்திரோபாய கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிலையம் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த மாநாட்டில் சிறப்புரையாற்றும் போதே அவர் மேர்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இலங்கையை அவமானப்படுத்த நினைப்பவர்கள் கெட்ட எண்ணத்துடன் இதனை பயன்படுத்துகின்றனர். இதற்கு எதிராக நாம் போராட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் இளைஞர்கள் சிங்கள இளைஞர்களை சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்த சோகமான நிலையை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான விஜயத்தின் மூலம் அறிய முடிந்தது.

இந்த பயங்கரவாதத்தின் ஊடாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது. சிங்கள இளைஞர்கள் தமிழ் கற்கவேண்டும். அதேபோன்று தமிழ் இளைஞர்கள் சிங்களம் கற்க வேண்டும்.

அவ்வாறில்லாவிட்டால் பொது மொழி ஒன்றின் ஊடாக இரு சமூகத்தினரும் தொடர்பு கொள்ள வேண்டும். இதற்காக இரு சமூகத்தினரும் சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தை கற்க வேண்டும்.

இது இரண்டு சமூகத்தையும் இணைப்பதற்குமுன்னிற்கும் இளைய சமூகத்தினர் மொழிகளை கற்றல் மிக முக்கியமாகும். அதேபோன்று தாய் நாட்டின் தேசிய மொழிகளை கற்பதற்கு இளைய சமூகத்தினர் அதிக முக்கியத்துவம் செலுத்த வேண்டும்.

இது அவர்களின் தொழில் முன்னேற்றத்திற்கு மாத்திரம் உதவுவதில்லை. இனங்களுக்கிடையில் நல்லெண்ண தூதுவர்களாக செயற்படுவதற்கும் உதவும். இதற்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2021 ஆம் ஆண்டில் நாட்டில் சகலரும் மும்மொழி பேசுபவர்களாக இருக்க வேண்டும்.

பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் ஏனைய சமூக மாணவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டும். நாடு ஒற்றுமைப்படுத்துவதற்கு பாடசாலைகளே சிறந்த இடமாகும்.

நாட்டை வெற்றி பாதையில் கொண்டு செல்வதா இல்லையா என்பதைதீர்மானிப்பவர்களும் இளைஞர்களே. எதிர்காலத்தில் நாட்டை பிளவுபடுத்துவதற்கு ஒரு போதும் இளைஞர்கள் முன்வரமாட்டார்கள். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இளைஞர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

நாட்டிலுள்ள வித்தியாசமான இன குழுக்களிடையே உறவினை ஏற்படுத்துவதற்காக மீள்கட்டியெழுப்பல், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்கம் ஆகிய 3R எனும் செயற்றிட்டத்தை அரசாங்கம் முன்வைத்துள்ளது.

இந்தத் திட்டங்கள் இலங்கையிலுள்ள அனைத்து இன குழுக்களினதும் மனதில் இடம்பிடிக்க வேண்டும். அத்துடன் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டு மாத்திரம் சுமார் ஒரு மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிதியினை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது

# பொருளாதார வளர்ச்சி 6.5 வீதமாக வீழ்ச்சி

## மத்திய வங்கி ஒப்புதல்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டில் 6.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

முன்னதாக, 2012 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8 வீதமாக இருக்கும் என்று திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், இந்த வளர்ச்சி இலக்கை இலங்கையினால் எட்டமுடியாது என்று பொருளாதார நிபுணர்களும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களும் கூறிய போது அதனை இலங்கை மத்திய வங்கி நிராகரித்து வந்தது.

இந்நிலையில் பல்வேறு காரணங்களினால் கடந்த ஆண்டில் எதிர்பார்ப்பட்ட 8 வீத பொருளாதார வளர்ச்சியை அடைய முடியவில்லை என்றும் 6.5 வீத பொருளாதார வளர்ச்சியே எதிர்ப்பார்க்கப்படுவதாகவும் இலங்கை மத்திய வங்கி கூறியுள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8 வீதத்துக்கு மேல் இருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அம்மா பகவான் பாதபூஜை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி வரை ஸ்ரீ அம்மா பகவானின் பாத பூஜைகள் நடைபெறவுள்ளன.

இப்பூஜையில் கலந்து கொண்டு பூஜையை மேற்கொள்ளவிரும்பும் பக்தர்களை 0777651719 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுள்ளனர். அ-9)

# துர்நாற்றத்தால் பாடசாலை மூடப்பட்டது

(கொழும்பு)

துர்நாற்றத்தினால் பாடசாலையொன்று நேற்று முன்தினத்தில் இருந்து மூன்று மாதங்களுக்கு மூடப்பட்ட சம்பவம் ஒன்று கொலன்னாவ கல்வி வலயத்தில் இடம் பெற்றுள்ளது.

கொலன்னாவ ராஹுல வித்தியாலயமே இவ்வாறு மூடப்பட்டுள்ளது. கொழும்பு மாநகர சபையினால் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் வெல்லம்பிட்டிய மீதொட்ட முல்ல பகுதியிலேயே கொட்டப்படுகின்றது.

அந்தக் குப்பை மேட்டுக்கு அண்மையில் இருக்கின்ற குறித்த வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததையடுத்தே பாடசாலையில் கல்விப்பயிலும் மாணவர்களை அருகிலுள்ள பாடசாலைக்கு மாற்றி விட்டு அந்த பாடசாலையை மூன்று மாதங்களுக்கு மூடிவிடுவதற்கு தீர்மாணித்ததாக கொலன்னாவ கல்வி வலய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# நாடாளுமன்ற செயற்பாடுகளே கேலிக்கூத்தாக மாறியுள்ளன

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் நாடாளுமன்ற செயற்பாடுகளே கேலிக்கூத்தாக இருக்கும் போது நாடாளுமன்றம் தான் அனைத்திலும் உயர்ந்தது என்று அரசு கூறுவதை ஏற்க முடியாது. நாடாளுமன்ற வழிமுறைகள் இலங்கையில் மதிக்கப்படுவது இல்லை என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

பிரதமநீதியரசரைத் தேடிச்சென்று வேட்டையாடும் ஓர் அணுகுமுறையை இந்த அரசாங்கம் பின்பற்றி வருவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குற்றவியல் பிரேரணை சமர்ப்பிப்பு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை ஆகிய அனைத்து நடவடிக்கைகளையும் ஜே.வி.பி. முற்றுமுழுதாக நிராகரிக்கின்றது.

பிரதம நீதியரசர் நீதிமன்றத்தை எதிர்நோக்காமால் அவரை பொறுப்பிலிருந்து நீக்குவதற்கு அரசு முயற்சி செய்து வருகின்றது என்றும் பிரதம நீதியரசருக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கைகளிலேயே அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அரசாங்கத்திற்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)




★ 1493-கொலம்பஸ் தான் கண்டுபிடித்த புதிய உலகை விட்டுப் புறப்பட்டார்.

★ 1642-இங்கிலாந்து மன்னன் முதலாம் சார்ல்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைது செய்ய தனது படைவீரர்களை அனுப்பினான்.

★ 1698-லண்டனில் அரச மாளிகையான வைட்ஹோல் தீயினால் சேதமுற்றது.

★ 1717-நெதர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தின.

★ 1762-ஸ்பெயின் மற்றும் நேபில்ஸ் மீது இங்கிலாந்து போரை அறிவித்தது.

★ 1847-சாமுவேல் கோல்ட் தனது முதலாவது சுழல் துப்பாக்கியை அமெரிக்க அரசுக்கு விலைக்கு விற்றார்.

★ 1854-கப்டன் வில்லியம் மக்டொனால்ட் என்பவர் மக்டொனால்ட் தீவுகளை கண்டுபிடித்தார்.

★ 1878-சோஃபியா நகரம் ஒட்டோமன் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றது.

★ 1884-ஃபாபியன் அமைப்பு லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1889-இலங்கையில் சப்ரகமுவ மாகாணம் என்ற புதிய மாகாணம் சேர் ஈ.என். வோக்கர் என்பவரால் உருவாக்கப்பட்டது.

★ 1896-யூட்டா 45 ஆவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தது.

★ 1912-பிரித்தானியக் காலனித்துவ நாடுகளில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1948-பர்மா ஐக்கிய இராச்சியத்திலிருந்து விடுதலை பெற்றது.

★ 1951-சீனா மற்றும் வட கொரியாப் படைகள் சியோல் நகரைக் கைப்பற்றின.

★ 1958-14 வயது பொபி ஃபிஷர் ஐக்கிய அமெரிக்காவின் சதுரங்க சம்பியன் போட்டியில் வெற்றி பெற்றார்.

★ 1958-முதலாவது செயற்கைக்கோள் ஸ்புட்னிக் 1 தனது சுழற்சிப் பாதையை விட்டு விலகி பூமியில் வீழ்தது.

★ 1959-லூனா 1சந்திரனுக்கு மிக அண்மையில் சென்ற விண்கலம் ஆனது.

★ 2004-ஸ்பிரிட் என்ற நாசாவின் தரையுளவி செவ்வாயில் தரையிறங்கியது.

### பிறப்புக்கள்

★ 1643-சேர் ஐசக் நியூட்டன், ஆங்கில அறிவியலாளர் (இ.1727)

★ 1809-லூயி பிநெயில் (இ.1852)

★ 1940-பிறையன் டேவிட் ஜோசெப்சன், நோபல் பரிசு பெற்றவர்

★ 1940-காவோ சிங்ஜியான் , நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்

★ 1945-ரிச்சார்ட் ஷ்ரொக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1984-ஜீவா,தமிழ் திரைப்பட நடிகர்

★ 1985-ஏல் ஜெஃபர்சன், அமெரிக்க கூடைப்பந்து வீரர்

### இறப்புக்கள்

★ 1960-அல்பேர்ட் காம்யு, நோப்பல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி.1913)

★ 1965-டி.எஸ். எலியட் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி.1888)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர்களுக்கான மேலதிக நேரக்கொடுப்பனவு அதிகரிப்பு

## தாதியர் சங்க செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமது மேலதிக வேலைக்கான கொடுப்பனவு, இடர் கொடுப்பனவு என்பவை இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க சேவை ஐக்கிய தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நிதியமைச்சின் செயலாளர் உட்பட பல உயர் அதிகாரிகளுடனான சந்திப்பை அடுத்து இரு தரப்பினரும் இந்த கொடுப்பனவு அதிகரிப்புக்கு இணக்கம் தெரிவித்ததாக இந்த தாதியர் சங்கம் கூறியுள்ளது.

இதன் பிரகாரம் தரம் 2பி தாதியரின் மேலதிக வேலைக்கொடுப்பனவு 65 ரூபாவிலிருந்து 100 ரூபாவாகவும் தரம் 2ஏ தாதியரின் கொடுப்பனவு 75 ரூபாவிலிருந்து 125 ரூபாவாகவும் தரம் 1 தாதியரின் கொடுப்பனவு 80 ரூபாவிலிருந்து 175 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இடர் கொடுப்பனவு 200 ரூபாவிலிருந்து 750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது எமக்கு கிடைத்த பெரிய வெற்றியாகும். இதனால் 11 ஆயிரம் தாதியர் நன்மையடைவர் என சங்கத்தின் செயலாளர் அசோக அபேநாயக்க கூறியுள்ளார்.

ஆயினும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இன்னும் இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (அ-2)

# மரண தண்டனைக்கு மாற்று தண்டனை வழங்க ஆலோசனை

## அமைச்சர் கஜதீர தெரிவிப்பு

குறிப்பிட்ட குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நீதி அமைச்சு ஆயுட்கால அல்லது நீண்டகால தண்டனையாக குறைக்கவுள்ளது என சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சரின் சிபாரிசுகளின் அடிப்படையிலேயே தண்டனை குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

300இற்கும் கூடுதலான மரண தண்டனை கைதிகள் தற்போது உள்ளனர். இலங்கையில் மரணதண்டனை விதிக்கப்படுகின்ற போதிலும் அவை நிறைவேற்றப்படுவதில்லை. கடைசியாக 1976 ஆம் ஆண்டு ஒரு குற்றவாளி தூக்கிலிடப்பட்டார்.

தனது அமைச்சு தெரிவு செய்யப்பட்ட கைதிகளின் மரண தண்டனையை அவர்களின் குற்றங்களுக்கு ஏற்ப குறைக்க வேண்டும் என வலியுறுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

சிலர் வழக்கை சரியாக கொண்டு செல்லாத காரணத்தினால் மரண தண்டனை பெற்றுள்ளனர். வழக்கு விசாரணைகளின் போது சட்ட உதவி கிடைத்திருந்தால் மரண தண்டனையை தவிர்த்திருப்பர்.

மரண தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை. எனவே, புனர்வாழ்வின் பின்னர் சமூகத்துடன் இணைக்க கூடியவர்களை இனங்கான வேண்டும். கடும்குற்றவாளிகள் தொடர்ந்தும் மரண தண்டனை கைதிகளாக வைத்திருக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மற்றும்படி மரண தண்டனையை ஒழிக்கும் திட்டமேதும் இல்லை என அமைச்சர் குறிப்பிட்டார்.

வல்லுறவு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் ஆகிய குற்றங்களை இழைத்தவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை அதிகரித்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

சிலவகைகைதிகளின்மரணதண்டனையை குறைப்பதற்கான திட்டங்கள் உள்ளன என நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா தெரிவித்தார்.

இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றுப்படுவதில்லை. எனவே, மரண தண்டனையை ஒழிக்கும் விருப்புக்குரிய சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட்டு மரண தண்டணையை ஒழிக்க வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் டாக்டர் பிரதீபா மகாநாமஹேவா கூறினார். (அ-2)

# கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் இடம்பெற வேண்டும்

## மக்கள் கோரிக்கை

(றெட்பானா)

கால்நடை வைத்திய நடமாடும் சேவையினை ஏற்படுத்தி தருமாறு மாணிக்கபுரம், தேராவில், வள்ளுவர்புரம் ,உடையார்கட்டு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களாக இவ்வாறான சேவைகள் எதனையும் இங்கு காண முடிவதில்லை என பல குறைபாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

ஏனைய மாவட்டங்களில் தொடர்ந்து கால்நடைகளுக்கான, வளர்ப்பு பிராணிகளுக்கான தடுப்பூசிகள் போடப்பட்டு நோய்களில் இருந்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் கால்நடைகள் பெருமளவாக காணப்பட்ட போதும் அவற்றை நோய்களில் இருந்து பாதுகாப்பதற்கான அடிப்படைத் திட்டங்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை .

இவற்றைவிட இப்பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கங்கள் அதிகரித்துள்ளன.

எனவே, மக்களையும் மிருகங்களையும் பாதுகாத்து கொள்வதற்காக பிரதேச சபையினர் கிராமப்புறங்களில் நடமாடும் சேவைகளை ஏற்படுத்தி விழிப்புணர்வு கருத்துக்களை வழங்க வேண்டும் என்பது மக்களின் வேண்டுகோளாக உள்ளது. (அ-3-260)

# பொதுச்சந்தை வரிகள் வெவ்வேறு தொகைகளில் அறவிடப்படுகின்றன

(ஆனையிறவு)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட விஸ்வமடு, கோம்பாவில் ஆகிய பொதுச்சந்தைகளில் வெவ்வேறு வரி அறவிடப்படுவதாக வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த சந்தைகள் ஏலத்தில் விடப்பட்ட போது தனி நபர்களால் இரு சந்தைகளும் பொறுப்பெடுக்கப்பட்டன.

ஆனால், இரு சந்தைகளில் வெவ்வேறு பட்ட வரி அறவிடப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு பிரதேசசபையின் கீழ் இயங்கும் சந்தைகளுக்கு ஒரு வரியே அறவிடப்பட வேண்டும்.

வரித் தீர்மானத்தை பிரதேச சபையே எடுக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

அதற்கான சிட்டைகளையும் பிரதேச சபை வழங்க வேண்டும்.

எனவே, உடன் விரைந்து நடவடிக்கை எடுத்து இரு சங்தைகளிலும் சம நிலையில் வரி அறவிடுவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-264)

# சுப்பர் மார்க்கெற் பொருட்கள் சிலவற்றுக்கு புதிய வற்வரியாம்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

பெரியளவில் வியாபாரம் முன்னெடுக்கப்படும் சுப்பர் மார்க்கெற் வலையமைப்புக்களில் விற்பனை செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தவிர்ந்து ஒருசில பொருட்களுக்கு புதிய வற் முறையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த மூன்று மாதங்களுக்குள் 500 மில்லியன் ரூபா விற்பனையை தாண்டியுள்ள குறிப்பிட்ட ஒருசில உணவுப் பொருட்களுக்கே இந்த புதிய வற் அறிமுகப்படுத்தப்படுமெனவும் அமைச்சர் கூறினார்.

இந்நடைமுறையினை ஜனவரி முதல் சீராக அமுல்படுத்துவது தொடர்பில் நிதியமைச்சுடன் பேச்சு நடத்தி வருகிறோம். தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களுக்கு இறக்குமதி வரியினை அதிகரிப்பதன் மூலம் தனியார் விற்பனை நிலையங்களில் எதேச்சதிகாரமான விலையதிகரிப்பு தொடர்ந்தும் இடம்பெறாது.

மேலும் அனைத்து உணவுப் பொருட்களுக்கும் நிலையான விலையினை நிர்ணயிக்க தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் முழுவதும் 33 ஆயிரம் சுற்றி வளைப்புக்களை முன்னெடுத்ததன் மூலம் 90 மில்லியன் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது. சட்ட விதிகளை மீறிச் செயற்படும் எந்தவொரு அரசாங்க அல்லது தனியார் அமைப்புக்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அறிக்கையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் மேலும் கூறினார். (அ-2)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவருக்கு விளக்கமறியல்

இலங்கையை சேர்ந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து 11 வீட்டுப் பணிப் பெண்களை பெற்றுத் தருவதாக தெரிவித்து சவுதி பிரஜையொருவரை ஏமாற்றி 3.2 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொண்ட வெல்லம்பிட்டியை சேர்ந்த லஹிரின் சை புதீனையே விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரத்ன உத்தரவிட்டுள்ளார்.

முறைப்பாட்டாளரான சவுதி அரேபிய பிரஜை தான் இலங்கை முகவரிடம் முழுப் பணத்தையும் செலுத்திவிட்ட போதும் அவர் பணிப்பெண்களை வழங்க தவறிவிட்டார் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவர் தனக்கு ஒரு காசோலையை வழங்கியதாகவும் அந்த காசோலைக்கான வங்கிக் கணக்கில் நிதியின்மையால் அந்த காசோலையும் செல்லுபடியற்றதாகி விட்டது எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ-2)


# ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

புகையிரத ஊழியர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை நாடளாவிய ரீதியில் 48 மணி நேர பணி நிறுத் தத்தில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே தொழிற் சங்கம் அறிவித்துள்ளது.

புகையிரத ஊழியர்களுக்கு கடந்த சில வருடங்களாக சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

எனவே, இதனை வலியுறுத்தி இந்த பணிநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக புகையிரத சம்மேளத்தின் ஏற்பாட்டாளர் ஜானக பெர்னாண்டோ தெரிவித்தார். (அ-2)




2013 ஆம் ஆண்டுக்கான நாணய செயல் நெறியை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று முன்தினம் சமர்ப்பித்ததை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாசு வெடித்ததில் 3 வயது சிறுமி பலி

புத்தளம் பகுதியில் பட்டாசு வெடித்து மூன்று வயது சிறுமி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி முக்குக்குவாவவெவ பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுமி வீட்டு முற்றத்தில் கிடந்த பட்டாசு ஒன்றை எடுத்து கடித்துள்ளார். அதன்போது அது வெடித்ததில் படுகாயம் அடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

சிகிச்சை பலனின்றி குறித்த சிறுமி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# 14 தாய்-சேய் மரணங்கள் தொடர்பில் விரிவான விசாரணை வேண்டும்

## யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி வழக்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற 14 தாய், சேய் மரணங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறியால் யாழ். நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11 நாட்கள் நிரம்பிய பெண்குழந்தை மற்றும் 4 நாட்களான பெண் குழந்தை ஆகியோரது சடலப் பரிசோதனையில் மரணத்திற்கான காரணம் தெளி வாகத் தெரிய வரவில்லை. அத்துடன் அக் குழந்தைகளுக்கு எவ்வகையான நோய்த் தாக்கம் ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளது என்பது தொடர்பாக விரிவான விசாரணை கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வயது மூப்பின் காரணமாக ஏற்படுகின்ற மரணங்கள் ஒரு தனிமனித இழப்பாகவும் ஒரு குடும்ப உறவின் இழப்பாகவும் மட்டுமே கருத்தில் கொள்ள முடியும். ஆனால், தாய், சேய் குழந்தைகள் மரணம் என்பது ஒரு சமூகத்தினுடைய இழப்பாகவே கருதப்பட வேண்டும். ஏனெனில் குழந்தைகளும் கர்ப்பிணி தாய்மார்களுமே சமூகத்தின் மனித உற்பத்தி மையங்களாக தொழிற்படுபவர்கள் ஆவார்.

வய்து கூடிய திருமணங்கள் மற்றும் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதனால் குழந்தைகளைப் பராமரிப்பதிலுள்ள சிரமங்கள் காரணமாக யாழ்ப்பாணத்தின் தமிழ் சமூகத்தின் பிறப்பு வீதம் பெருமளவு குறைந்து கொண்டு செல்கின்றது. இதன் காரணமாக எதிர்காலத்தில் வயது முதிர்ந்த மூத்த சமூகத்தினர் மரணமடையும் போது எமது சமூகத்தின் அடர்த்தி மேலும் குறைவடையும்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் சமூக, அரசியல், பொருளாதாரத்தில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். சமூகத்தினுடைய நலனை கருத்தில் கொண்டு தாய், சேய் குழந்தைகள் மரணத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

ஒரு பிரதேசத்தில் தாய், சேய் குழந்தைகள் இறப்பு வீதம் அதிகரிக்குமாயின் அது தொடர்பாக விரிவான விசாரணைகளை நடத்தி சுகாதார அமைச்சுக்கு அறிக்கை தாக்கல் செய்து தேவையான மருத்துவ உதவிகளை பெற்று இம்மாணவர்களைத் தடுக்க வேண்டியது பிராந்திய சுகாதார பணிமனையின் பொறுப்பாகும்.

மற்றும் வைத்தியசாலைகளில் நிகழ்கின்ற தாய், சேய் குழந்தைகள் தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளரினால் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பிராந்திய சுகாதார பணிமனையூடாக சுகாதார அமைச்சுக்கு அறிவித்து தேவையான உதவிகளைப் பெற்று அம்மரணங்களை தடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால், இது சம்பந்தமாக இதுவரையும் எந்த விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

பாதிக்கப்பட்டவர்கள் சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்கள். அது தொடர்பாகவும் தாங்கள் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமென வேண்டுகின்றேன். அவை வருமாறு,

1. நோய்க்காக சிகிச்சைக்கு அரச வைத்தியசாலைகளுக்குச் செல்லும் போது நோயாளியை பொறுமையோடும் அக்கறையோடும் பரிசோதிப்பதில்லை நோயை நிர்ணயம் செய்யமாலேயே மருந்தை தந்துவிடுகின்றார்கள். இதன் காரணமாகவும் மரணம் சம்பவிக்கின்றது.

2. பெரும்பாலான வைத்திய நிபுணர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பணம் செலுத்தி காட்டுகின்ற நோயாளர்களையே அரச வைத்தியசாலைகளில் பார்வையிடுகின்றார்கள்.

3.உரிய நேரத்தில் உரிய சிகிச்சையை வழங்காமல் காலதாமதப்படுத்துவதனாலும் மரணம் சம்பவிக்கின்றது.

4.யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரசவ விடுதிகளில் மகப்பேற்று நிபுணர்கள் பிரசவங்கள் பார்ப்பதில்லை என்றும் அங்குள்ள விடுதி வைத்தியர்களினாலேயே பிரசவங்கள் பார்க்கப்படுவதாகவும் அதன் காரணமாகவே பிரசவ வேளை மரணங்கள் அதிகமாகயிருப்பதற்கு ஒரு காரணமென குற்றஞ்சாட்டுகின்றனர் என அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-6)

# மாணவர்களை விடுவித்து சர்வதேச குற்றச்சாட்டிலிருந்து மீளுங்கள்

## பல்கலை. ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கம் மக்களின் உரிமைகளை மீறுவதாக சர்வதேச சமூகம் குற்றம் சுமத்தியுள்ளது. இக்குற்றச் சாட்டுக்களுக்கு அரசாங்கம் இட மளிக்கக்கூடாது. மேலும் நாட்டை கேலிக் கூத்தாக்கி விடக்கூடாது என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தடுத்து வைத்துள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரையும் அதிகாரம் வாய்ந்தோர் விடுவிப்பதன் மூலம் சர்வதேச சமுதாயத்திற்கு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை சுமத்த இடமில்லாமல் செய்ய முடியும்.

இந்த மாணவர்கள் ஆயுதங்களை வைத்திருக்கவோ முன்னர் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கவோ இல்லை. எனவே, இவர்களை விடுதலை செய்து பல்கலைக்கழகங்களை இயங்க வழிசெய்ய வேண்டும் என்று அந்த சம்மேளனத்தின் பேச்சாளர் டாக்டர் மஹிந்த மெண்டிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் நாட்டை கேலிக் கூத்தாக்கி விடக்கூடாது. மக்களின் உரிமைகளை மீறுகின்றது என சர்வதேச சமூகம் குற்றம் சுமத்துவதற்கு இடமளிக்கக்கூடாது.

யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள நிலைமையினால் யாழ்ப்பாண மக்களும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் கெடுபிடிகளுக்கு முகம்கொடுத்து கொண்டிருக்கின்றனர்.

எழுந்தமானமாக கைதுகள் இடம்பெறும் போது அங்கு வழமையான நிலைமையாக இருக்கமுடியாது. கடந்த நவம்பரில் மோதல் ஏற்பட்டதிலிருந்து பல்கலைக்கழக நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் பல்கலைக்கழக மாணவர்கள் பலரை விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இதுவரை 50 பேர் வரையில் யாழ்ப்பாணத்தில் கைதாகியுள்ளனர். அவர்களின் குடும்பத்தினர் யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர் என்றார். (அ-2)

# ஊசி மருந்து குப்பியில் கண்ணாடித் துகள்கள்

## விசாரணை அறிக்கையை இந்தியாவுக்கு சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

களுபோவில போதனா வைத்தியசாலையில் அண்மையில் ஊசி மருந்து குப்பியில் இருந்து கண்ணாடித் துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை துரிதமாக இந்திய அரசாங்கத்திற்கு தாக்கல் செய்யுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்திய நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்படும் க்ளோக்கோசிலின் என்ற ஊசி மருந்தில் இருந்தே கண்ணாடித் துகள்கள் எடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தேசிய மருந்து பகுப்பாய்வு நிறுவனம் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகள் பலவற்றில் இருந்து கண்ணாடித் துகள்கள் மீட்கப்பட்ட சம்பவம் இதற்கு முன்னரும் பதிவான நிலையில் அவ்வவ்போது இலங்கை இது குறித்து இந்தியாவிற்கு தெரியப்படுத்தி வந்துள்ளது.

இந்நிலையில் தற்போது கண்ணாடித் துண்டு மீட்கப்பட்ட மருந்தை இலங்கையில் தடைசெய்வது என்று சுகாதார அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ-2)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம் :- மகம் 3<br>உயரம்:-5'10"<br>கி.பா.:-60.5<br>தொழில்/ தகைமை:- A/L<br>சுவிஸ்<br>தொ. இல: B -903 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம் :- கார்த்திகை 4<br>உயரம்:-5' 3"<br>கி.பா.:-29.5, 4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை:- GAQ<br>தொ. இல: G -923 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம் :-அனுசம் 2<br>உயரம்:-5' 5"<br>கி.பா.:-25.75,4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை:- H.N.D.A.<br>கட்டட மேற்பார்வையாளர்<br>தொ. இல: B -904 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம் :- ரேவதி 4<br>உயரம்:-5'<br>கி.பா.:-79.25,8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை:- HNDM<br>(கணனி தனியார் நிறுவனம்)<br>தொ. இல: G -926 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம் :-அனுசம் 3<br>உயரம்:-5' 6"<br>கி.பா.:-21.5, 4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை:- மேசன் வேலை<br>(6 வருடம் சவுதியில் இருந்தவர்)<br>தொ. இல: B -905 | பிறப்பு: 1988 இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம் :- உத்தரம் 4<br>உயரம்:-5' 3"<br>கி.பா.:-12.5,4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை:- A/L<br>(பத்திரிகை நிருபர்)<br>தொ. இல: G -928 |
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம் :- பூசம்<br>உயரம்:-5' 7"<br>கி.பா.:-8.25<br>தொழில்/ தகைமை:- BSc<br>(UK, PR)<br>தொ. இல: B -907 | பிறப்பு: 1992 இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம் :-விசாகம்<br>உயரம்:-5' 2"<br>கி.பா.:-20.5<br>தொழில்/ தகைமை:- A/L<br>(சைவபோசனம் விரும்பத்தக்கது)<br>தொ. இல: G -921 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைபஸ்,நெருப்புக்காய்ச்சலினால் 521 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு தைபஸ்,நெருப்புக்காய்ச்சலினால் 521 பேர் பாதிப்படைந்துள்ளனர் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையின்தொற்று நோய் தடுப்பு பிரிவின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த தகவலின் அடிப்படையில் கடந்த வருடம் குடாநாட்டில் தொற்று நோய்களினால் அதாவது டெங்கு, தைபஸ், நெருப்புக் காய்ச்சலினால் ஆயிரத்து 125பேர் பாதிப்படைந்துள்ளனர்.இதில் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக காணப்படுவதாகவும் கடந்த வருடம் 604 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும் இதில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் யாழ்.குடாநாட்டில் அதிக பாதிப்பை ஏற்படுத்திய தொற்று நோய்களில் இரண்டாவதாக தைபஸ்காய்ச்சல் உள்ளது. கடந்த வருடம் 278 பேர் இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 365 பேர் தைபஸ் நோய் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் என்ற சந்தேகத்தின்பேரில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இதில் ஜனவரி மாதம் 148 பேர் சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அதில் 100பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதே போன்று பெப்ரவரி மாதம் 64 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அதில் 62 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

மார்ச் மாதம் 15 பேர் அனுமதிக்கட்டுள்ளனர்.14 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.ஏப்ரல் மாதம்10 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அதில் 5பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.இது தவிர மே மாதம் 5 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் 4 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.யூன் மாதம் 5 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.அதில் ஒருவர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு யூலை மாதம் 3 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் 9 பேர்இனம் காணப்பட்டுள்ளனர்.

ஓகஸ்ட் மாதம் 3 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.2 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

செப்டெம்பர் மாதம் ஒருவர் அனுமதிக்கப்பட்டு இனம் காணப்பட்டுள்ளார்.ஒக்டோபர் மாதம் 3 பேர் அனும திக்கபட்டுள்ளனர்.

இதேவேளை நவம்பர் மாதம் 16 பேர் அனுமதிக்கப்பட்டு 7 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர் .டிசெம்பர் மாதம் 92 பேர் அனும திக்கப்பட்டு 70 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர் என அந்தப்புள்ளி விபரதகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை விட நெருப்புக்காய்ச்சலினால் கடந்த 2012 ஆம் ஆண்டு குடா நாட்டில் 243 பேர் பாதிப்படைந்துள்ளனர். 429 பேர் சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கடந்த வருடம் ஜனவரி மாதம் 68 பேர் சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.அதில் 42 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி மாதம் 52 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அதில் 26 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

மார்ச் மாதம் 28 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.17 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். ஏப்ரல் மாதம் 18 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.அதில் 9 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

மே மாதம் 26 பேர் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.3 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். யூன் மாதம் 36 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அதில் 2 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை யூலை மாதம் 24 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.27பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஓகஸ்ட் மாதம் 36 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.26பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். செப்டெம்பர் மாதம் ஒருவர் அனுமதிக்கப்பட்டு இனங்காணப்பட் டுள்ளார். அதே வேளை ஒக்டோபர் மாதம் 3 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.3பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.நவம்பர் மாதம் 16 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அதில் 7 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.டிசெம்பர் மாதம் 92 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அதில் 70 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.என அந்த தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## ஒருவருடத்திற்கு இலவச மின்சாரம்; அமைச்சரின் கூற்று பொய்யானது

### மக்கள் விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருடத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுமென மின்சக்தி எரிசக்தி அமைச்சரால் தெரிவிக்கப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட மின்பாவனை சேவையாளர் நிலையத்தை திறந்து வைத்த அமைச்சர் மக்கள் மத்தியில் உரையாற்றும் போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு ஒருவருடத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுமென தெரிவித்தார்.

அம்மக்கள் மின் இணைப்பு வேலைகளை துரித கதியில் முடித்து மின்சாரம் பெற்ற நிலையில் இலவசமாக மின்சாரம் கிடைக்காது மின்சாரத்திற்கான பணத்தை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முள்ளி வாய்க்கால் கிழக்கு கிராமத்தில் உள்ள ஒரு குடும்பம் இலவச மின்சாரம் பெற்று ஆறுமாதம் பூர்த்திடைந்த நிலையில் 6 மாதத்திற்கான மின்சார கட்டணத்தை செலுத்துமாறும் செலுத்தாவிடின் மின்சாரம் துண்டிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு இச் செயற்பாடு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

எனவே உரியதரப்பினர் இவ்விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

## அபிவிருத்தி பேரவையின் இலவச கணனி பயிற்சி

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையினரால் அப்பிரதேசத்தை சேர்ந்த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இலவசக் கணனி பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை பளை முல்லையடியில் இயங்கும் பேரவை அலுவலகத்தில் பெற்று எதிர் வரும் 10 திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு பேரவைச் செயலாளர் க.சண்முகதாஸ் அறிவித்துள்ளார்.

இப் பேரவையால் இது வரை 5 கட்டங்களாக நடத்துப்பட்ட கணனிப் பயிற்சி வகுப்புக் களில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள், இளைஞர் யுவதிகள் கலந்து பயிற்சியை பூர்த்தி செய்து சான்றிதழ்களை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

## புராதன சிலைகள் விற்பனை; மூவர் கைது

கலகெதர பகுதியில் புராதன புத்தர் சிலைகள் இரண்டை விற்பனை செய்ய முயன்ற மூன்று சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பித்தளையினால் செய்யப்பட்ட குறித்த புத்தர் சிலைகளை இந்நபர்கள் விற்பனை செய்ய முயற்சித்ததாகவும் பொலிஸா ருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் நீர் கொழு ம்பு மாரவில மற்றும் வெரலுகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## 29 கிராம சேவகர் பிரிவுகளில் மண்சரிவு அபாயநிலை

(மாத்தளை)

மாத்தளை மாவட்டம் அதிக மண்சரிவு ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது. இதற்கமைவாக கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும்127 குடும்பங்களை அவ்விடங்களிலிருந்து அகற்றுவதற்கான உத்தரவுகள் பிறப்பிக் கப்பட்டிருப்பதாக தேசிய கட்டட ஆய்வுகள் அமைப்பின் தலைவர் ஆர்.எம்.எஸ். பண் டார தெரிவித்துள்ளார்.

இரத்தோட்டை, உக்குவளை, நாவுல மற்றும் மாத்தளை பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 29 கிராம சேவை அலு வலகர் பிரிவுகளில் மண்சரிவு மற்றும் நிலத் தாழிறக்கம் முதலான அதி ஆபத்து நிலவும் பிரதேசங்களென இனங்காணப்பட்டுள்ளன. (அ-2)








கடந்த 28 ஆம் திகதி மண்டைதீவில் அருள்சீலன் குணசேகரன் சுடரினி (வயது-4)என்ற பாலகி வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் குற்றவாளியை கண்டறிந்து கைது செய்வதை வலியுறுத்தியும் மண்டைதீவு பொது அமைப்புக்கள் இணைந்து நேற்று முற்பகல் 10 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் தேவாலயம் முன்றலிலிருந்து மௌனப்பேரணி ஒன்று ஆரம்பமானது இப்பேரணியின் இறுதியில் முன்பள்ளிச் சிறார் ஒருவரால் யாழ். மாவட்ட சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் எம். மொஹமட் ஜெப்றியிடம் மகஜர் கையளிக்கப்படுவதை படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவிதமான எண்ணங்களை மேற்கொள்வது தான் பலவீனத்திற்கு காரணமாக அமைகிறது.
~ரவீந்திரநாத் தாகூர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வட்டுக்கோட்டையில் ஆசிரியர் இடமாற்ற மாநாடு பிரமதேவர் தலைமையிலான குழு கண்காணிப்பு

இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டாலும் வன்னிப் பிரதேசத்திற்கான ஆசிரியர் இடமாற்றத்திற்கு தீர்வைக் காணவே முடியாதுபோல் உள்ளது.

வன்னிக்கான ஆசிரியர் இடமாற்றம் தடைப் படுவதால் உள்ளக இடமாற்றங்களும் ஸ்தம்பித்துப் போயுள்ளன.

வன்னிப் பிரதேசத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் காட்சிப் படுத்தப்பட்டதும் பட்டியலில் இடம்பெற்ற ஆசிரியர்கள் இறைவனை நோக்கிக் கடும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

வன்னி இடமாற்றத்தை ரத்துச் செய்தால் பொங்கல் படைப்போம்; வடைமாலை போட்டு மடை எடுப்போம்; கந்தசஷ்டி விரதத்தை கட்டாயம் பிடிப்போம்; மடுவிற்குச் சென்று மாதாவை வழிபடுவோம் இப்படியான நேர்த்திகள் குவிந்த வண்ணம் இருக்க,

சாட்ஷாத் ஈஸ்வரன் நிலைமையை அறியும் பொருட்டு பிரமதேவர் தலைமையிலான விசேட குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தார்.

பிரம தேவர் தலைமையிலான குழுவில் சர்வ மத இறைபிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய வலங்களுக்குச் சென்று நிலைமையை அறிய பிரமதேவர் குழு முற்பட்டதாயினும், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (நிர்வாகம்), கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் என இடமாற்றத்துடன் தொடர்புபட்டவர்கள் வட்டுக்கோட்டைக்குச் சென்றுவிட்டதாக அறிவித்தல் கிடைக்க, பிரமதேவர் தலைமையிலான குழுவிற்கு அதிர்ச்சி.

முன்பும் ஒருதடவை வட்டுக்கோட்டையில் மாநாடு போட்டுத் தீர்மானம் எடுத்தார்கள். அது இன்றுவரை வட்டுக்கோட்டைத் தீர்மானமாகப் பேசப்படுகிறது.

இப்போதும் வட்டுக்கோட்டை என்கிறார்கள். எதற்கும் அங்கு போய்ப் பார்க்கலாம் என்றவாறு குழுவினர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு செல்கின்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் வளாகம் முழுவதிலும் கல்வி அதிகாரிகளின் வாகனங்கள். பார்க்க அழகாக இருக்கின்றது என்று நினைத்தபடி தேவர் குழு ஆசிரியர் இடமாற்ற மாநாடு நடைபெறும் மண்டபத்திற்கு செல்கின்றார்கள்.

மாநாட்டில் இருப்பவர்கள் கொதிப்பும் கடுப்புமாக இருப்பதை அவதானித்த குழு அங்கு நடப்பதை மட்டுமன்றி நடிகர் விவேக் போல் அங்கிருப்பவர்கள் தமது மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் கூர்ந்து அவதானிக்கிறார்கள்.

ஒரு அதிகாரி, கோவையைப் புரட்டியவாறு தன் மனதில் பின்வருமாறு நினைக்கிறார்.

இரண்டு ஆசிரியர் சங்கங்களும் ஒன்றுக்கொன்று போட்டி. ஒன்று சரியென்றால் மற்றையது பிழையென்று கூறும். முதலில் இரண்டு ஆசிரியர் சங்கங்களும் தாங்கள் ஒன்றுகூடி இடமாற்ற விதிமுறைகளை கூட்டாகத் தயாரித்து அதைக் கல்வி அதிகாரிகளிடம் கையளித்து அதன் பிரகாரம் இடமாற்றம் செய்ய வேண்டும்.

இரண்டு ஆசிரியர் சங்கங்களும் தங்களுக்குள் கொண்டுள்ள கடும் போட்டிதான் ஆசிரிய இடமாற்றக் குழப்பதற்கு முழுக்காரணம்.

இப்படி நினைக்க மற்றொரு அதிகாரியின் நினைப்பு... (நாளை தொடரும்)

# வெள்ளைக்காரனுக்கு தலைசாய்க்க ஜனாதிபதி தயாராக இல்லை

### அமைச்சர் நிமால் சூளுரை

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாட்டுத்தலைவர்கள் மாநாட்டை பணயக்கைதிபோல வைத்து எமது நாட்டின் உள்ளகப் பிரச்சினையில் தலையிட எந்தநாட்டிற்கும் இடமளிக்கமுடியாது என சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார். செப்டெம்பர் மாதத்தில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாடு பெரும்பாலான நாட்டுத் தலைவர்களின் பங்களிப்புடன் சிறப்பாக நடைபெறும் எனவும் ஓரிரு நாடுகள் பங்கேற்காமல் இருப்பதால் பாதிப்பு ஏற்படாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆளும்கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரத்தை வைத்து பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்காதிருக்க சில நாடுகள் தயாராவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், எமது நாட்டின் சட்டங்களுக்கமைய பிரதம நீதியரசருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் இறைமையிலோ உள்ளகப் பிரச்சினையிலோ தலையீடுசெய்ய எந்தநாட்டிற்கும் உரிமைகிடையாது. வெள்ளைக்காரனுக்கு தலைசாய்க்க ஜனாதிபதி தயாராக இல்லை.

சிறிய நாடானாலும் எமது உள்ளக விடயங்களில் பெரிய நாடுகள் தலையிட முடியாது. பொதுநலவாய பாராளுமன்ற மாநாட்டை நாம் சிறப்பாக நடத்தி முடித்தோம். இதில் பங்கேற்ற நாடுகள் இலங்கை குறித்து பாராட்டுத் தெரிவித்தன.

பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டிலும் அநேகமான நாடுகள் பங்கேற்கும். பேர்த்தில் நடைபெற்ற மாநாட்டின் போதும் அடுத்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதைத் தடுக்க சில நாடுகள் முயன்றன. அது பலனளிக்கவில்லை. சகலரையும் திருப்திப்படுத்தமுடியாது.

மனித உரிமை பேரவை மாநாட்டில் இலங்கைக்கு சார்பான பல நாடுகள் உள்ளன. குற்றப்பிரேரணை விவகாரத்தினால் இங்கு பெரிய பாதிப்பு ஏற்படுமென கருதவில்லை என்றார். (அ-2)

## புலிகள் இருந்திருந்தால் சிறுவர் போராளிகளும் இருந்திருப்பர்

### சுட்டிக் காட்டுகிறார் கோத்தா

தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் சண்டையிடும் ஆற்றலை கொண்டிருந்தால் சிறுவர் போராளிகளின் பிரச்சினையை தீர்த்திருக்க முடியாது என்பதை சர்வதேசம் உணர வேண்டும் என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறுவர் போராளிகள் தொடர்பிலான ஆவணத்தை ஐக்கிய நாடுகள் சபை மூடிவிடுவதாக அறிவித்துள்ளமையை அடுத்தே அவர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த 1998 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையுடன் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்ட போதும் விடுதலைப்புலிகள் சிறுவர் போராளி படையை தொடர்ந்தும் நடத்தி வந்தனர்.

எனினும் அவர்கள் 2009 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட பின்னரே சிறுவர் போராளிகள் பிரச்சினையை தீர்க்க முடிந்திருக்கிறது என்று கோத்தபாய சுட்டிக் காட்டியுள்ளார்.

போர் நிறுத்த உடன்பாடு அமுலில் இருந்த போது பாடசாலைகளில் விடுதலைப்புலிகளின் பயிற்சி நடவடிக்கை கள் முடிபடைந்து அணிவகுப்பு இடம் பெற்ற போது அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளும் பிரதம விருந்தினர்களாக பங்கேற்றதாக அவர் சிங்கள நாளிதழ் ஒன்றிற்கு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## பலவீனமான எதிர்க் கட்சியுடனும் அரசு ஜனநாயகத்துடன் நடக்கிறது

### புழுகுகிறார் அமைச்சர் மைத்திரிபால

(கொழும்பு)

பலவீனமான எதிர்க் கட்சியொன்று இருந்தபோதிலும் அரசாங்கம் ஜனநாயகமாக நடந்து கொள்வதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்

மகாவலி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் நலனுக்காகவும் ஜனநாயகத்தை பாதுகாக்கவும் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளில் இருந்து நாம் பின்வாங்க மாட்டோம்.

அரசியலமைப்பிற்கமைய சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம். முன்மா திரியாக நாம் செயற்படுவோம்.

தற்போது மிகவும் பலவீனமான எதிர்க் கட்சியொன்றே காணப்படுகின்றது. அரசாங்கம் பாரியளவிலான அபிவிருத் தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தக்கூடிய வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பலவீனமான கட்சி தொகுதி அமைப்பாளர்கள் நீக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)




மூத்தோர் சொல் அமிழ்தம் போன்றது என எமது முன்னோர் கருதினர். ஏனெனில் மூத்தோர் தாம் வாழ்வியலனுபவத்திற்கூடாகப் பெற்ற பட்டறிவு கொண்டே எல்லோருக்கும் ஏற்ற அறிவுரைகளைக்கூறி வந்தனர். பெரியவர்களை மதித்து நடப்பதும் அவர் சொற் கேட்பதும் தமிழர் பண்பாடாக இருந்தது. பெற்றோரையும் பெரியோரையும் வணங்கி வாழும் வாழ்வியல் ஒன்று நீண்டகாலமாக நிலவியது. பக்தி இலக்கியங்களில் இறைவனையே தாய் தந்தையாகப் பாவனைசெய்து பாடிய பாடல்கள் பல உள.

முன்பின் தெரியாத ஒரு பெரியவரைக்கண்டால் மதிக்காமல் இன்று செல்கின்ற ஒரு புதிய பண்பாடு தோன்றியுள்ளது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் பெரியவர்களது வழிகாட்டலின்றியே சுயமாகச் செயற்படலாம் என்ற நம்பிக்கை இளைய தலைமுறையினரிடையே தோன்றிவிட்டது. அக்கருத்தை மாற்றுவதும் கடினமாகவே உள்ளது. ஆனால் வாழ்வியல் அனுபவம் என்பது தொழில்நுட்பத்தாலும் விஞ்ஞான வளர்ச்சியாலும் பெறமுடியாதது. மனித உணர்வுகளை மதித்துச் செயற்படும் பண்புநிலை பக்தியால்தான் கைகூடும் என்பது எல்லோரும் அறியவேண்டியது.

இக்கருத்தை மணிவாசகர் பாடல்கள் நன்குணர்த்தி நிற்கின்றன. அவர் தன்னை ஒரு பெரியவனாகவே எண்ணியிருந்தார். ஆனால் குரு உபதேசம் பெற்ற் பின்னர் தன்னிலையைத் தெளிவாக உணர்ந்து கொள்கிறார். இறைவன் அருளை மறுத்த தன் அறியாமையை உணர்ந்த பின்னரே வேண்டுதல் செய்கிறார். என்னை நீ வெறுத்து விட்டுவிடாதே என்று கேட்கிறார். என்னை நீ ஒறுத்து ஆண்டுகொள்ள வேண்டும் என விண்ணப்பம் செய்கிறார். ஒறுத்தல் என்பது ஒருவர் செய்த தவறுக்கு அவர்கள் அதனை உணருமாறு ஏதாவது செயற்பாடுகளைச் செய்வித்தலாகும். மணிவாசகர் மந்திரியாக இருந்தபோது நிர்வாக நிலையில் இத்தகைய ஒறுத்தல் செயற்பாடுகளைப் பயன்படுத்தியுள்ளார். இப்போது தானே தவறு செய்தபோது தன்னைத் தண்டிக்குமாறு இறைவனைக் கேட்கிறார்.

நாம்தவறுசெய்வதற்குநமதுவினையே காரணம் என்ற கருத்து பரவலாக உள்ளது. வினை என்பது செயற்பாட்டைக் குறிப்பது. பழவினையால் இப்பிறவியிலே துன்பத்தை அனுபவிக்க நேரிடும் என்ற கருத்தும் நிலவுகிறது. இதனை இன்றைய தலைமுறையினருக்குத் தெளிவுபடுத்துவது கடினம். ஆனால் மணிவாசகர் இறை வனிடம் தன்வினையின் தொகுதியை ஒறுத்து ஆண்டுகொள்ளுமாறு கேட்கிறார். என் மணியே என இறைவனை விளித்து இந்தவேண்டுதலைச்செய்கிறார். இங்கே மணியென்பது கிடைத்தற்கரிய ஒரு பொருள் என்பதைக் குறித்து நிற்கிறது. எதிர்பாராத நிலையில் மணிவாசகர் இறைதரிசனமும் உபதேசமும் பெற்றார். தவறுகள் செய்திருந்த நிலையிலும் இறைவன் வலிய வந்து ஆட்கொண்டமையால் இறைவனுடைய பெருந்தன்மையை அவரால் நன்குணர முடிந்தது.

திரு உத்தரகோச மங்கைக்கு அரசனாக வீற்றிருக்கும் இறைவன் கருணை அவரை மெய்சிலிர்க்க வைக்கிறது. இறைவன் பெரிய கருணைக்கு முன்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

னால்தான் மிகக்கேவலமான சிறுநாய் போல இருப்பதாக உணர்கிறார். மணிவாசகர் தன்னைப் பல பாடல்களில் நாய் எனக் குறிப்பிட்டுள்ளார். மனித வாழ்வியலில் நாய் வீட்டு மிருகமாக வளர்க்கப்பட்டாலும் கீழ்மையானதொன்றாகவே கருதப்படுகிறது. சிறுநாய்கள் பொய்யினைப் பெரியோர் பொறுப்பர் என மணிவாசகர் பாடலிலே குறிப்பிடுவது தன்னை மட்டுமன்றித் தன்னைப் போன்ற ஏனையவர்களையும் இணைத்து வேண்டுதல் செய்வதாக அமைந்துள்ளது.

மறுத்தனன் யானுன் அருளறி
யாமையில் என் மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண்டாய்
வினையின் தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தர
கோசமங் கைக்கரசே
பொறுப்ப ரன்றே பெரி யோர்சிறு
நாய்கள் தம் பொய்யினையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லஹிரு திரிமன்ன, மஹேல ஜெயவர்தன இருவரினதும் சிறப்பான ஆட்டத்தின் மூலம்

# இலங்கை 294 ஓட்டங்கள்



அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது. நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 294 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றுவரும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் களத்தடுப்பை மேற்கொள்ள தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட போதிலும் மத்தியவரிசை வீரர்கள் சிறப்பாக ஆடாததால் 294 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. முதலாவது விக்கெட்டை 26 ஓட்டங்களுக்கே இழந்த போதிலும், டில்ஷான், மஹேல இருவரும் சிறப்பாக ஆடினர். அதன் பின்னர் சிறிய சிறிய இணைப்பாட்டங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் இலங்கை அணி மிகப்பெரிய இணைப்பாட்டத்தைப் பெறாததால் போதுமான ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை. துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக லஹிரு திரிமன்ன 91 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்தன 72 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 34 ஓட்டங்களையும், டினேஷ் சந்திமால் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஜக்ஸன் பேர்ட் 4 விக்கெட்டுக்களையும், மிற்சல் ஸ்ரார்க் 3 விக்கெட்டுக்களையும், பீற்றர் சிடில் 2 விக்கெட்டுக்களையும், நேதன் லையன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## நான் அணியில் இல்லாவிட்டாலும் என இதயம் அவர்களுடன்தான் இருக்கிறது

சச்சின்



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், முதல் முறையாக பத்திரிகையாளர்களை சந்தித்தார். இங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இந்திய கிரிக்கெட் அணி மீண்டும் எழுச்சி பெறும். நான் அணியில் இல்லாவிட்டாலும் என இதயம் அவர்களுடன் தான் இருக்கிறது. இந்த நேரத்தில் நமது ஆதரவு மற்றும் வாழ்த்துக்கள் அணிக்கு தேவைப்படுகிறது. இதனால் அவர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும்.

கடந்த 23 ஆண்டுகளாக ஒருநாள் போட்டிக்கான அணியில் பங்குபற்றியிருக்கிறேன். அது மறக்க முடியாத பயணம். நான் உயர்ந்த போதும், தாழ்ந்தபோதும் எனக்கு ஆதரவு அளித்த ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

2013 ஆம் ஆண்டு தொடங்கியிருக்கும் இவ்வேளையில், அனைவரும் மகிழ்ச்சியுடனும், ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

ஓய்வுக்குப் பிறகு விடுமுறையில் உத்தர காண்ட் மாநிலம் முசோரியில் உள்ள ஓய்வு விடுதியில் சச்சின் தனது குடும்பத்தாருடன் விடுமுறைப் பொழுதை மகிழ்ச்சியாக கழித்தார்.

இந்த இனிய அனுபவம் பற்றி அவரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோது, கடந்த 23 ஆண்டுகளில், அதிகமான போட்டிகளில் பங்கேற்றதால் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட ஒருசில வாய்ப்புகள் மட்டுமே கிடைத்தன. இங்கே நீண்ட தூரம் வந்து குடும்பத்தினருடன் பொழுதை கழிக்கும்போது சந்தோசமாக இருக்கிறது. இந்த நாடு எவ்வளவு அழகாக உள்ளது? இந்த இடம் எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டேன் என்றார்.

## காற்பந்து வீரர் லுகாஸ் ரூ.325 கோடிக்கு ஒப்பந்தம




பிரான்சை சேர்ந்த பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் காற்பந்து அணி, பிரேசில் காற்பந்து வீரர் லுகாஸ் மெவுராவை ரூ. 325 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. பாரீஸ் செயின் ஜெர்மைன் கால்பந்து அணியை கடந்த ஆண்டு கட்டார் இன்வெஸ்ட்மென் கம்பனி வாங்கியது.

அதன்பின்பு அந்த அணி ஏராளமாக முதலீடு செய்து தியாகோ சில்வா, ஸ்லாட்டன் இப்ராஹிம்விச் போன்ற முன்னணி வீரர்களை ஒப்பந்தம் செய்தது. இந்நிலையில் பிரேசில் நாட்டை சேர்ந்த சாபாலோ அணிக்காக விளையாடி வந்த 20 வயது இளம் வீரரான லுகாஸ் மெவுராவை ரூ.325 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

கட்டாரில் உள்ள இந்த அணியின் பயிற்சி முகாமில் நேற்று அவர் அதிகாரப்பூர்வமாக இணைந்தார். அவருக்கு அந்த அணியின் 29ஆம் எண் ஆடை (ஜேசி) வழங்கப்பட்டது.

## இலங்கை கிரிக்கெட் அணியின் மகளிர் தலைவராக சசிகலா



மும்பையில் அடுத்த மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணியின் தலைவராக சசிகலா சிறிவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையில் நடைபெற்ற உலகக் கிண்ண 20-20 கிரிக்கெட் போட்டியில் பங்கேற்ற இலங்கை அணியின் தலைவ ராகவும் அவர் நியமிக்கப்பட்டிருந்தார். இலங்கை கிரிக்கெட் அணிக்காக 34 ஒருநாள் கிரிக் கெட் போட்டிகளுக்கு சசிகலா தலைமைத்துவம் வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


# UNIVERSITY OF JAFFNA

## BID NOTICE

The Chairman, Department Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.

| Work / Service Details | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Approximate direct cost of the work (Rs. in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Urgent Improvements to Mini Board Room, University of Jaffna | 8,000.00 | 500.00 | 0.8 | C10 |
| Repairs, Improvements and Painting work, Siddha Medicine Unit, University of Jaffna | 30,000.00 | 500.00 | 3.0 | C8 |
| Raising up Boundary wall at R.A.F.A Hostels, Maruthanarmadam, University of Jaffna | 11,000.00 | 500.00 | 1.1 | C9 |
| Construction of Panel Room at University of Jaffna, Thirunelvely, Jaffna | 4,000.00 | 500.00 | 0.4 | C10 |
| Construction of Panel Room at University of Jaffna, Kilinochchi | 4,000.00 | 500.00 | 0.4 | C10 |
| Termite Proofing of the 3 Nos single storey Buildings, University of Jaffna. | 2,500.00 | 500.00 | 0.3 | C10 |
| Construction of Sokage pit with Filter Trenches to Improve Waste water Disposal at Balasingam Hostel, University of Jaffna | 3,000.00 | 500.00 | 0.3 | C10 |

Bid forms may be obtained from the ***Deputy Registrar / Capital Works & Planning Unit University of Jaffna*** upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till ***18.01.2013***.

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till **2.30 p.m on 24.01.2013** and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely, Jaffna.
02.01.2013

(C-2026)

Registrar
University of Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் தொடரை கோட்டைவிட்டது இந்தியா


ஆட்ட நாயகன் நஷீர் ஜாம்செட்

(கொல்கத்தா)

சென்னையைத் தொடர்ந்து கொல்கத்தாவில் நடந்த 2-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் பாகிஸ்தான் வெற்றிபெற்று எளிதாக தொடரை வென்றது.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது.

இதையடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் ஆரம்ப வீரர்கள் நஸீர் ஜாம்ஷெட் மற்றும் ஹபீஸ் ஜோடி இந்திய பந்துவீச்சை எளிதாக எதிர்கொண்டது.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் வீரர் ஜம்ஷெத் மீண்டும் சதம் அடித்து அபார திறமையை வெளிப்படுத்தினார்.

அவர் 120 பந்துகளில் 12 பவுண்டரிகள் 2 சிக்ஸர்களுடன் இந்த இலக்கை எட்டினார். பின்னர் 106 ஓட்டங்களில் ஜடேஜா பந்து வீச்சில் அவர் தோனியால் ஸ்டம்பிங் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

முன்னதாக ஹபீஸ் 76 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் இந்திய பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் வீரர்கள் தொடர்ந்து விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

இறுதியில் 48.2 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 250 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்திய தரப்பில் இசாந்த் சர்மா மற்றும் ஜடேஜா தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இதையடுத்து 251 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது.

ஆரம்ப ஆட்டக்காரர்களாக ஷேவாக்கும் காம்பீரும் களம் இறங்கினர். இருவரும் நிதானமாக விளையாடினர். ஆனால் ஜுனைட் கான் வீசிய 10 வது ஓவரில் காம்பீர் (11 ரன்கள்) போல்டு ஆனார். அடுத்து வந்த ஹோலி 6 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். இந்த அதிர்ச்சியில்இருந்து மீள்வதற்குள் அதிரடி வீரர் ஷேவாக் ஆட்டமிழந்தார். அவர் 31 ரன்கள் சேர்த் திருந்தார். யுவராஜ் (9 ரன்), ரெய்னா (18ரன்) அஸ்வின்(3ரன்), ஜடேஜா(13ரன்), பிரவீன் குமார் (ரன் இல்லை), டின்டா(ரன் இல்லை) ஆகியோரும் விரைவில் அரங்கு திரும்பியதால் இந்திய அணி தோல்வியை நோக்கிப் பயணித்தது.

இருந்தாலும் நெருக்கடியை சமாளித்து நிதானமாக ஆடிக் கொண்டிருந்த தோனி 54 ஓட்டங்களைச் சேர்த்தார். முடிவில் இந்திய அணி 48 ஓவர்களில் 165 ஓட்டங்களுக்குள் சுருண் டது.

பாகிஸ்தான் தரப்பில் ஜுனைட் கான்;சயிட் அஜ்மல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தனர். உமர் குல் 2 விக்கெட் எடுத்தார். 85 ரன்கள் வித்தியாசத்தில்அபார வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி 3 போட்டி கொண்ட ஒரு நாள் தொடரையும் 2-0என்ற கணக்கில் கைப்பற்றியது.




போட்டியின் நாயகனாக சதம் அடித்த நசிர் ஜாம்ஷெட் தெரிவானார்.

3வது மற்றும் கடைசி ஒரு நாள்போட்டி டெல்லியில் 6-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடக்க இருக்கிறது.

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி!

மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 01-ம் திகதி புதுவருட தினத்தன்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு முள்ளியவளை சிலாவத்தை பகுதியை சொந்த இடமாக கொண்ட செல்வநாயகம் றொபேட் (வயது23) என்பவரே பலியானவராவார்.

புதுவருடம் அன்று தனது பாட்டியின் வீட்டுக்கு சென்றபோதே குறித்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முன் அனுமதி பெறாமலும் பாதுகாப்பு அற்ற முறையிலும் பெறப்பட்ட மின்சாரத்தாலேயே இவ்வனர்த்தம் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக மின்சாரம் வழங்கிய நபரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளதுடன், சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-267)

## மினிபஸ் விப...

(வயது-40) என்பவரே இவ் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் யாழில் இடம்பெற்று வரும் வீதி அபிவிருத்தி பணி மேற்பார்வையாளராக பணியாற்றி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொடிகாமத்திலிருந்து யாழ்.நோக்கி வந்த மினி பஸ்ஸே வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியின் ஓரமாக நின்ற மேற்படி நபர் மீது மோதியுள்ளது.

வாகனத்தினால் பலமாக் மோதுண்டமையினால் பிரஸ்தாப நபர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழக்க நேரிட்டுள்ளது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-85)

## பிரதம நீதியரசரை விசாரி...

தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடுத்த இரண்டு மனுக்களை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் இதனைத் தெரிவித்துள்ளது.

நீதி பரிபாலன அதிகாரம் கொண்ட அமைப்பினால் மட்டுமே நீதிபதிக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை விசாரிக்க முடியும் என்று விளக்கமளித்துள்ள மேன்முறையீட்டு நீதி மன்றம், இந்த வழிமுறை பின்பற்றப்படவில்லை என்றால் நாட்டின் மொத்த நீதித் துறையின் அதிகாரத்திற்குமே பெரிய அச்சுறுத்தல் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளது.

நிர்வாக உத்தரவு ஒன்றின் கீழ் ஏற்படுத்தப் பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவே தலைமை நீதிபதியை விசாரித்துள்ளது என்றும், நிர் வாக உத்தரவு என்பது சட்டமாகாது என்ற சூழலில் தலைமை நீதிபதியை விசாரித்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு நீதி பரிபாலன அதிகாரங்கள் இல்லை என்றும் மேல் முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க மீது பல்வேறு முறைகேடு மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர் மீது கண் டன பதவி நீக்க நடைமுறை ஒன்றை அரசாங்கம் கொண்டுவந்திருந்தது.

இந்த குற்றச்சாட்டுக்களை விசாரித்த பெரும்பாலும் ஆளும் கூட்டணி உறுப்பினர்களைக் கொண்டநாடாளுமன்றத் தெரிவுக்குழு, நீதிபதிக்கு எதிராக ஒரு சில குற்றச்சாட்டுக்களை உறுதி செய்திருந்தது.

ஆனால் தெரிவுக்குழுவின் விசாரணையும் முடிவும் நீதித்துறைக்கு எதிரான அச்சுறுத்தலாகவே அமைகின்றன என நாடு பூராகவும் விமர்சனங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-1)

## தோட்டக்...

மதியமே கிணற்றிலிருந்து கண்டறியப்பட்டார்.

பிரேதப் பரிசோதனைக்காகவும் மரண விசாரணைக்காகவும் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (செ-24)

## ரி.ஐ.டியினரின் விசாரணை...

அனைத்து ஏற்பாடுகளுடனும் மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளனர்.

எனினும் அன்றையதினம் மருத்துவரினை நீதிமன்றில் ஆஜர்படுத்தாத பொலிஸார் உறவினர்கள் மருத்துவருடன் இல்லாத சமயம் பார்த்து நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தி விசாரணைகளுக்கான கால அவகாசத்தினை பெற்றும் உள்ளனர்.

இதன் அடிப்படையில் மருத்துவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பயங்கரவாத அடிப்படையில் காணப்படுவதால் அவர் வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

இவர் வவுனியாவிற்கு கொண்டு செல்லப் பட்ட நிலையில் இவருக்கும் புனர் வாழ்வு அளிக் கப்படுமா என கேள்வி யெழுப்பப்படுகிறது.

மேலும் யாழ்.பல்கலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து பயங்கரவாதத் திற்கு ஆதரவாக செயற்படும் அனைவருக்கும் புனர்வாழ்வு அளிக்கப்படுமென பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மருத்துவர் இ.சிவசங்கர் வவுனியாவிற்கு மாற்றப்பட்டமை குறித்து யாழ்.வைத்தியர் சங்கத் தலைவர் எஸ்.நிமலனிடம் கேட்டபோது, தற்போது அவர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் இல்லை எனவும் அவர் எங்கு உள்ளார் என எமக்கு உறுதியாக தெரியாதுள்ளதாகவும் தெரிவித்தார். (செ -4)

## 'பாலியல் வன்கொடுமை...

பகல் 10 மணியளவில் மண்டைதீவு பேருதுவானவர் தேவாலயம் முன்பாக மௌனப்பேரணி ஒன்றினை நடத்தியிருந்தன.

இந்தப் பேரணியில் மண்டைதீவு ரோஜாவனம் முன்பள்ளி சிறார்களும் பங்கு கொண்டதோடு தமது கைகளில் எதிர்ப்புப் பதாகைகளை தாங்கியவாறு பேரணியில் கலந்து கொண்டனர்.

அத்தோடு சக மாணவியான கு.சுடரினியின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்து யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.மொகமட் ஜெப்ரி மற்றும் கடற்படை அதிகாரியிடமும் மகஜர் கையளித்தனர்.

இந்த மௌனப் பேரணியில் மண்டைதீவு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மண்டைதீவுப் பங்குத்தந்தை, வேலணை ஊர் காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர்கள், பிரதேசசபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், சுகாதார தொண்டர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், பொதுமக்கள், மாணவர்கள் என பலதரப்பட்டவர்களும் பேரணியில் பங்கு கொண்டனர்.

சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துமாறும் கொலை செய்யப்பட்ட சிறுமிக்கு நேர்ந்த நிலை எதிர்காலத்தில் எந்த சிறார்களுக்கும் ஏற்படக் கூடாது எனவும் இதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மௌனப்பேரணியில் கலந்து கொண்டவர்கள் தமது கைகளில் தாங்கியிருந்த பதாகைகளின் மூலம் வெளிப்படுத்தினர்.

மண்டைதீவு பேதுருவானவர் தேவாலயம் முன்பாக ஆரம்பமான இந்தப் பேரணி தேவாலயம் முன்பாக உள்ள சிறுவீதியூடாக யாழ்ப்பாணம் அபிவிருத்தி சபையின் உப அலுவலகத்திற்கு சென்றது. (மண்டைதீவில் உள்ளது) அங்கு வேலணை பிரதேசசபைத் தலைவரிடம் ரோஜாவனம் சிறுவர் கழகத்தின் தலைவரினால் மகஜர் கையளிக்கப்பட்டது.

அதன்பின்பு அங்கிருந்து பொலிஸ் காவலரண் நோக்கி பேரணி சென்றதோடு அங்கு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கடற்படை அதிகாரிகள், யாழ்.ஆயரின் பிரதிநிதி உள்ளிட்டவர்களிடம் முன்பள்ளி சிறுமியால் மகஜர் கையளிக்கப்பட்டது.

அத்தோடு மௌனப் பேரணி முடிபுற்றதும் பேரணியில் கலந்து கொண்ட அதிகாரிகள் கண்டன உரையையும் ஆற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## நல்லூர் காவலரண்...

ஊடவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லூர் ஆலயச் சூழலில் இராணுவக் காவலரண் இருப்பதை பொதுமக்களும் விரும்பவில்லை;நானும் விரும்பவில்லை.

ஆலயச் சூழலில் இவ்வாறு காவலரண் அமைக்கப்பட்ட விடயத்தை பத்திரிகை வாயிலாகவே அறிந்து கொண்டேன்.

ஆனால் அதன்பின்பு பல பொது மக்களும் என்னிடம் முறையிட்டனர். இதனையடுத்து யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் இந்தப் பகுதி படைப்பிரிவுக்கு பொறுப்பான அதிகாரியுடனும் கலந்துரையாடினேன்.

கலந்துரையாடல் மூலம் மேற்படி ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள காவலரணை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இராணுவ அதிகாரிகள் உறுதிப் படுத்தியுள்ளனர்.

இன்னும் சிலநாட்களில் மேற்படி காவலரண் அகற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தை...

புனர்வாழ்வுக்காக கால வரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இம் மாணவர்களினை விடுவிக்கக் கோரி நாடு பூராகவும் அரசியல் கட்சிகள் உட்பட கல்வியாளர்களும் ஆர்ப்பாட்டங்களிலும் பேரணிகளிலும் ஈடுபட்டதோடு பல்கலை நிர்வாகமும் தன்னாலான முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தது.

எனினும் பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்கவும், பல்கலைக்கழக மாணவர்கள் புனர்வாழ்வுக்குட்படுத்தப்படாமல் விடுதலை செய்யப்பட மாட்டார்கள் என உறுதியாக கூறியிருந்தனர்.

இவ் இருவரின் முடிவுக்கு பதிலளிக்க பல்கலை விரிவுரையாளர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டால் தான் பல்கலை கல்விச்செயற்பாடுகள் மீள ஆரம்பிப்பது சாத்தியமாகும் என தெரிவித்திருந்தனர்.

எனினும் பாதுகாப்பு தரப்பு தன் முடிபில் சற்றும் தளராமல் மாணவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவோம் என தனது இறுதி முடிபினை கூறியிருந்தது.

இந் நிலையில் கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாக இயங்கா நிலையில் உள்ள பல்கலைக்கழகத்தினை மீள இயக்குவதற்கு யாழ்.பல்கலை நிர்வாகமும் பெரு முயற்சி எடுத்ததோடு பல்கலையின் பீடங்களும் தனித்தனியாக ஒன்று கூடின.

அவற்றின் ஒன்று கூடல்கள் தீர்க்கமான முடிபின்றியே முடிபுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த நிலையில் பல்கலை செயற்பாடுகளினை மீள ஆரம்பிக்குமாறு உயர்கல்வி அமைச்சும் அழுத்தம் கொடுத்துவந்தது. இதன் ஒரு அங்கமாகவே நேற்றையதினம் உயர்கல்வி அமைச்சருடனான சந்திப்பொன்று கொழும்பில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் செயலிழந்துள்ள பல்கலைக்கழகத்தினை மீள ஆரம்பிப்பதற்கு பல்கலை நிர்வாகம், பீடாதிபதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எனினும் இச்சந்திப்பின் தீர்க்கமான முடிவுகளினை வெளியிட பல்கலை நிர்வாகமும், உயர்கல்வி அமைச்சும் மறுத்துள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதியன்று பல்கலையினை மீள ஆரம்பிப்பது என இச்சந்திப்பில் முடிபெடுக்கப்பட்டுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கேணல்.டக்ளஸ் தேவானந்தா, உயர்கல்வி அமைச்சின் பிரதி அமைச்சர் நந்திமித்திர ஏக்கநாயக்க, அமைச்சின் செயலாளர்களும் யாழ்.பல்கலை சார்பில் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், பீடாதிபதிகள், யாழ்.இராணுவகட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

# சீருடை தரித்த இராணு...

தமிழ் பெண்களையும் மாணவர்களினையும் இராணுவம் தொடர்ச்சியாக உளசுத்திகரிப்பு நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது.

அதன் ஒரு வெளிப்பாடே இராணுவத்தினர் சிங்களமொழி கற்பிக்கும் முயற்சியாகும் அரசும் இராணுவம் நினைத்துக் கொள்கின்றது. இவ்வாறு மாணவர்களினை எமது கண்காணிப்புக்குள் கொண்டுவந்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்என, ஆனால் மாணவர்கள் மீதான தொடர்சியான அடக்கு முறைகளில் அரசு எதிர்வினை சந்திக்கப் போகிறது.

சமாதான காலங்களில் புத்த கோவிலை தமிழர் பிரதேசங்களில் கட்டி அங்கு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசின் தொடர்ச்சியான திட்டமிட்ட தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையால் தமிழ் மக்களின் மனங்கள் பழைய நிலையில் இருந்து 'மாற்றமடையப் போவதில்லை.

சீருடை அணிந்த இராணுவம் பாடசாலை மாணவர்களிற்கு கற்பிப்பது என்பது ஆசிரியர் தொழிலை அவமதிப்பது போன்றதாகும்.

இதனை நாம் வன்மையாக கண்டிப்பது மட்டுமல்லாது இராணுவத்தின் இச்செயலிற்கு எதிராக நாம் நீதிமன்றம் நாடவுள்ளதாக தெரிவித்தார். (செ-4)

நாளை ஆரம்பம்
A/L 2015 வர்த்தக பிரிவு 9am
A/L 2013 PAPER CLASS 10 am
BEACON- யாழ்.நகர்
A/L 2014 புதிய தேர்ச்சிகள்
கணக்கீடு R.சுகிர்தன்
பொருளியல் K.பிரதீபன்
வணிகக்கல்வி: K.செந்தூரன்
(சி-2037)

நாளை ஆரம்பம்
A/L - 2015
(கலை, வர்த்தகம்)
காலை 9 மணிக்கு
DMI
Jaffna

A/L - 2015
புவியியல் – N.பாபு (BA.Geo.spl)
வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்
DMI யாழ் நகர் | C.C.A சுன்னாகம்
பிறஸ்மன் மானிப்பாய் | றோயல் அக்டமி சங்கானை
ஆட்ஸ் அக்கடமி புத்தூர்
ஆரம்பம் – 05.01.2013 (சனி)

DCM யாழ்.நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
A/L - 2015
கலை, வர்த்தகம்
பொருளியல் S.வரதராஜன்
கணக்கீடு P.பகீரதன்
வணிகக்கல்வி V.முரளி
தமிழ் K.சந்திரலிங்கம்
புவியியல் P.S.குமரன்
அரசியல் K.சுகாஷ்
இந்து நாகரிகம் T.ஸ்ரீஸ்
வரலாறு R.R.ஆனந்தன்
அளவையியல் T.நீதன்
நாட. அரங்கியலும் S.R.றமேஷ்
(சி-2015)
ஆரம்பம் 05.01.2013 சனி - காலை - 9.00

A/L 2015
New Economics College
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
கலை, வர்த்தகப் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

A/L 2015 TAMIL & ENGLISH MEDIUM
கணித, உயிரியல் பிரிவுகள்
CHEMISTRY S.வாசு | PHYSICS N.எடிசன் | C.MATHS P.விமலநாதன்
BIOLOGY V.A.ஞானனேந்திரன் | S.சுதா
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் : 05.01.2013 சனி காலை 8.00

மணல் விற்பனைக்குண்டு
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 23,000/-
தொடர்புகளுக்கு
தீபன்
0722694462
(C-2033)

வரலாறு A/L - 2015
தேசிய மாவட்ட மட்டங்களில் யாழ்.மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் சாதனைமிக்க பெறுபேறுகளைப்பெற வழிகாட்டிய உங்கள் ஆசான் M.பத்மன் B.A. (Hons) His M.A.(Histry) அவர்களின் வகுப்புக்கள் 05.01.2013 (சனிக்கிழமை) ஆரம்பமாகிறது.
கற்பிக்கும் இடங்கள் : DMI, யாழ்.நகர்
உயர் கலைக் கல்லூரி குளப்பிட்டிச் சந்தி. (சி-1942)

கட்டிடம் வாடகைக்கு
அச்சுவேலி மத்திய பஸ் நிலையம் முன்பாக 1500 சதுர அடி பரப்பைக் கொண்டதும், முன்புறம் வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய, புதிதாக கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிடம் வாடகைக்கு விடப்படும்.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு:
0777705101
(1336)

O/L பரீட்சைக் தோற்றிய மாணவர்களுக்கான
Free WorkShop
வேலை வாய்ப்பை இலக்காக கொண்ட
* Web designing
* Networking
* Multimedia
MCS IT CAMPUS
324,palaly road Jaffna
Type ws<name><course> &send to 772 395 895
(C-2036)

DMI நிர்வாகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்
நாளை ஆரம்பமாகவிருக்கும் A/L - 2015 கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கு இடநெருக்கடி ஏற்படுமென DMI நிர்வாகம் கருதுவதால் 15 நிமிடங்கள் முன்னதாக சமுகம் தரும்படி வேண்டப்படுகிறீர்கள்.
நன்றி
நிர்வாகம்
DMI
Jaffna

A/L 2015
வர்த்தகப்பிரிவு
கணக்கீடு : K.பாலகஜன்
பொருளியல் : NB.கஜீதரன்
வணிகக்கல்வி : S.யசோதரன்
S.K.பாலசபேஸ்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் : 05.01.2013 சனி காலை 8.00
கலைப்பிரிவு
தமிழ் : A.K கீர்த்திராஜன் | அளவையியல் : P. கமல்
இந்து நாகரீகம்: T.ஸ்ரீஸ் | பொருளியல் : NB. கஜீதரன்
வரலாறு : RR.ஆனந்தன் | அரசியல் : A.K றொபின்சன்
புவியியல் : S.R.பாலா | நாட.அரங்கியல் : S.R. ரமேஸ்
விவசாயம் : S.M.V.தேவா | ஊடகவியல் : R. இராஜேஸ்வரன்
கிறிஸ்தவம் : R.கஸ்ரோன் | சித்திரம் : R.R.ராஜ்
ICT : R.இராஜேஸ்வரன் | English : S.Jaisan
(சி-2027)

2013 ஆம் ஆண்டுக்கான புதிய ஆங்கில, கணினி பாடநெறிகள் ஆரம்பம்
யாழின் முதன்மைக் கல்லூரியில் இணைவதனூடாக சர்வதேச தராதரங்களை வென்றிடுங்கள்
அனைத்துப் பாடநெறிகளும் ஆரம்பமாகின்றன...
05.01.2013 காலை 9.00 மணி
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான 6 மாத Cambridge Univercity யின் சான்றிதலுடன் கூடிய Diploma In English
உயர்கல்வி மாணவர்களுக்கான சர்வதேச சான்றிதழ்களுடன் கூடிய Diploma In English
வெளிநாட்டு விசாக்களுக்கான ஆங்கில பாடநெறி மற்றும் அதற்கான பரீட்சைகள்.
தரம் 04 - 08 வரையான மாணவர்களுக்கான SPOKEN ENGLISH COURSE
Computer Courses (50% கட்டணக் கழிவுடன் பா
நெறிகளைத் தொடருங்கள் CSS ISO 9001 - 2008
Spoken Sinhala Courses (04 months)
(1371
0774924166/ 0777364362/ 0770610271
E-CITY College Of English
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
பிரதான வீதி, சங்கானை (மல்லாகம்சந்தி முன்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.